5

செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

சிலம்பு-௫௩] வள்ளுவர் ஆண்டு ௨௦௧௦, ஆனி, July '79 [பரல்-௧௧

செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு ருங	திருவள்ளுவர் ஆண்டு உ௰௧௦, ஆனி ஜூலை 1979	பரல் கக

புலவர் புகழ் வளர்த்த கழகம் 2.

பொறியியல், மொழியியல் துறைகளில் மட்டுமன்றி, மெய்ப் பொருளியல், உயிரியல் முதலிய பல்வேறு துறைகளிலும் மற்றும் இசை ஓவியம் முதலிய கலைத்துறைகளிலும் பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் மிகுந்த ஈடுபாடும் அறிவாராய்ச்சியும் உடையராய் விளங்கினர். தமிழ்நாட்டின் மிகப்பெரிய நீர்த்தேக்கமாகிய மேட்டூர் அணைக்கட்டிற்குத் தக்க இடத்தைத் தேர்ந்து வரைவு செய்து கொடுத்தவர் இவரேயாவர். இவர் பொறியியல் துறையில் அறுபதுக்கு மேற்பட்ட புதுமைகளைக் கண்டுபிடித்துள்ளார். அறிஞர் பேரவைகள் பலவற்றில் பல்வேறு துறைகள் தழுவிய அரிய விரிவுரைகள் நிகழ்த்தியுள்ளார்.

நாயக்கர் அவர்களின் கட்டுரைகளும், எழுத்து வடிவம் பெற்ற சொற்பொழிவுகளும் 'செந்தமிழ்ச் செல்வி'யில் வெளிவந்துள்ளன. தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம் (The Tamil Alphabet and its mystic aspects), உயிர் வளர்ச்சியிற் கண்ட இறைவடிவம் (The evolution of intellect in coordination with form); கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும், மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் முறையீடு, சென்னையில் நமது விலங்குக் காட்சிச் சாலை முதலிய இவர்தம் சொற்பொழிவுகள் சிறப்பு வாய்ந்தன; நூல் வடிவமாக வெளிவந்தன. இவற்றுள் முன்னவை இரண்டும் ஆங்கில வடிவினின்றும் திரு க. ப. மகிழ்நன் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டுக் கழகப்பதிப்பாக வெளிவந்துள்ளன. இவர்கள் எழுதி வைத்திருந்த 'தமிழ் அறிவியற் சொற்கள்' என்ற தலைப்பில் உருவரைக் கணக்கு (Geometry) எண்ணளவை (Arithmatic) என்னும் இரண்டு அகரவரிசைப் பட்டிகளும், மற்றும்

சில கட்டுரைகளும் செல்வி 10 முதல் 16ஆம் சிலம்புகளிற் காணலாம்.

மறைமலையடிகள், கா. சு. பிள்ளை, பா. வே. மாணிக்க நாயக்கர் ஆகிய மூவரும் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற முப்பேரறிஞர்கள். நாயக்கர் அவர்கள் 1931இல் காலமாயினர். அதனையொட்டிக் கழகத்தின் சார்பில் அவர்கள் இரங்கற்கூட்டம் நடத்தப்பட்டது. அடுத்த சில ஆண்டுகளில் நினைவுவிழாக்கள் நடத்தப்பட்டன; தமிழ்ப் பேரறிஞர் 'பா. வே. மாணிக்கநாயக்கர்', என்னும் நூல் வெளியிடப்பட்டுள்ளது. நாயக்கரவர்களின் வாழ்க்கைச் சிறப்புக்களையும், பொறியியல் புதுமைகளையும், அறிவியல் முதலிய பல்துறை நூலாக்கங்களையும் அனைவருங் கண்டு பயனுறும் வண்ணம் அவற்றை விளக்கும் வகையில் கழகம் ஒரு காட்சியமைத்தது. அந்த அளவிற்கு அக்கறையுடன் கழகம் நாயக்கரைப்பற்றிக் குறிப்புக்கள் முதலிய பலவற்றைத் தொகுத்து வைத்துள்ளது. புதுவது புனைந்த பேரறிஞரான நாயக்கரவர்களின் புகழ்பரவக் கழகம் ஒல்லும்வகையில் பணியாற்றியுள்ளது. கழக நூலாசிரியருள் ஒருவரான திரு என். கே. வேலன் அவர்கள் நாயக்கர் அவர்களின் தங்கை மகனார் ஆவர்.

தஞ்சை மாவட்டத்து நடுக்காவேரி என்னும் சிற்றூரில் தோன்றிய வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தாமே பயின்று பெரும்புலமை எய்திய தனிப்பெருஞ் சிறப்பினராவர். திருச்சி ஈபர் கண்காணியார் கல்லூரியிலும், பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் தமிழ்ப்பணியாற்றிய இவர் சிவநெறிப்பற்றும், ஒழுக்கமும் வாய்ந்தவர். கழக ஆட்சியாளர் அவர்களிடம் பேரன்பும் நட்புங்கொண்டவர். கழக அமைச்சர் திருவரங்கனார் அவர்கள் நாட்டார் அவர்களின் புலமையாற்றலை நன்முறையிற் பயனுறச் செய்ய வேண்டும் என்னும் விழைவுடன் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்திற்கு உரைவிளக்கம் வரையுமாறு வேண்டினர். நாட்டார் அவர்களும் அவ் வேண்டுகோட்கிணங்கித் திருவிளையாடற் புராணத்திற்கு உரை வகுத்தனர். இப் புராணத்திற்கு நாட்டார் உரையே சிறந்த உரையாக இன்றுகாறும் நிலைபெற்று விளங்குகின்றது. தொகை நூல்களுள் ஒன்றான அகநானூற்றுக்கு நாட்டார் அவர்கள் சீரிய உரை வகுத்துள்ளனர். 'கலித்தொகை மாநாடு' என்னும் முதல் இலக்கிய மாநாடு 2-3-1940இல் சென்னையில் பண்டித நாட்டாரவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் உரை சிறந்த விளக்கவுரையேயாயினும் தமிழ்மக்களின் தவக்குறைவால் புகார்க் காண்டத்தின் 'கானல்வரி'க்கும், மதுரைக் காண்டத்தின் 'வழக்குரை காதை' முதலிய நான்கு காதைகட்கும், வஞ்சிக்

காண்டம் முழுமைக்கும் அவ்வுரை கிட்டவில்லை. ஆகவே சிலப்பதிகாரத்திற்கு முழுமையான உரையொன்று தேவைப்பட்டது. நாட்டார் அவர்களே இப்பணியைச் செம்மையாக நிறைவேற்ற வல்லார் என்றுணர்ந்த கழக ஆட்சியாளர், அவர்களைத் தூண்டினர். நாட்டார் அவர்களின் சிலப்பதிகார உரை வெளிவந்து தமிழ் மக்களை உவப்பித்தது. ஐம்பேரிலக்கியங்களுள் மற்றொன்றான மணிமேகலைக்கும் பழையவுரை ஏதுமின்மையால் அதற்கும் நாட்டார் அவர்கள் உரை வரைந்தனர்.* 'நக்கீரர்' முதலியனவாக இவர் எழுதிய ஆராய்ச்சி நூல்களும் பல.

நாட்டார் அவர்களின் புலமைச் சிறப்பையறிந்த சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தார் அவருக்கு 'நாவலர்' என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தனர். கழகத்தின் தூண்டுதலின் விளைவாகத் திருவிளையாடற்புராண உரையாலும், சிலப்பதிகார மணிமேகலை அகநானூறு உரைகளாலும் தமிழிலக்கிய உலகில் நாவலர் வேங்கடசாமி நாட்டார் அவர்களின் புகழ் நிலைபெற்று விளங்குகின்றது.

திருத்தவத்துறை (லால்குடி)யை யடுத்த அரசங்குடி என்னுஞ் சிற்றூரினரான மு. சரவணமுதலியார் அவர்கள் இயல்பாகவே தமிழார்வம் மிக்கவர். அவ்வூரில் அவர் பயிர்த்தொழில் செய்து கொண்டும் பலசரக்குக் கடை நடத்திக்கொண்டு மிருந்தார். வெள்ளப் பெருக்கால் விளை நிலம் மண்மேடிட்டுவிட்டது. வணிகமும் நொடித்துப்போய்விட்டது. இந் நிலையில் அவர் வருந்திக்கொண்டிருந்தார். கழகம் திருவிளையாடற் புராணத்திற்கு உரைவரையுமாறு திரு நாட்டாரவர்களைக் கேட்டுக்கொண்டபோது அவர்கள் திரு முதலியாரவர்களைக் குறிப்பிட்டு அவரைத் தமக்குத் துணையாக அமர்த்திக்கொள்வதாகவும், அவருக்கு மாதந்தோறும் சிறு தொகை கொடுத்துவருமாறும் தெரிவித்தார்கள். அவ்வாறே கழகம் அளித்துவந்தது. முதலியாரவர்கள் சொற்பொருளெழுத நாட்டாரவர்கள் விளக்கவுரை வரைந்து திருவிளையாடற் புராண உரையை உருவாக்கி நிறைவு செய்தார்கள். திருச்சி மாவட்டக் கழகப் பொறுப்பாளராக இருந்த திரு தி. மு. நாராயணசாமிப் பிள்ளையவர்களிடம் நாட்டாரவர்கள் பரிந்துரைத்தமையால் பிள்ளையவர்கள் முதலியாரை மாவட்டக் கழகப் பள்ளியில் தமிழ் ஆசிரியராக அமர்த்த ஆவன செய்தார்கள். தொடர்ந்து அப் பணியாற்றி வருகையில் திருத்தொண்டர் புராணத்தில் மிகுந்த ஈடுபாடுடைய

---

* *மணிமேகலையின் 25 காதைகட்கு உரையெழுதி முடிந்த நிலையில் நாவலர் அவர்கள் காலமாயினர். உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளையர்கள் அதன் எஞ்சிய ஐந்து காதைகட்கும் உரையெழுதி நிறைவு செய்தனர்.*

முதலியாரவர்கட்குக் கழகம் சொற்பொழிவுகட்கு ஏற்பாடு செய்து அவர்தம் தனித்திறம் வெளிப்பட ஆவன செய்தது. முதலியார் அவர்கள் அறிஞர்களால் "பெருஞ்சொல் விளக்கனர்" என்று பாராட்டப் பெற்ருர். தமிழ் வரலாற்றில் அவர் பெயர் நிலைபெற்றது.

கரந்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் புலமையைப் போலவே பண்பாடும் நிறைந்தவர். இவரியற்றிய 'தமிழரசி குறவஞ்சி' தமிழ்ச்சுவை மிக்கது. தொல்காப்பியச் சொல்லதிகாரம்-தெய்வச்சிலையார் உரையை இவர் கரந்தைத் தமிழ்ச் சங்க வாயிலாக வெளியிட்டுள்ளார். கழகம் தெய்வச்சிலையார் உரையைச் செம்மைப்படுத்தி வெளியிட்டபோது முதலில் அதனை வெளியிட்ட வேங்கடாசலனர்க்குத் தன் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டது. நாவலர் வேங்கடசாமி நாட்டாரவர்கள் அகநானூற்றிற்கு விளக்கவுரை வரையுங்கால் சொற்பொருள் எழுதித் துணை நின்றவர் இவரே. இரண்டாவதாகக் கழகம் சென்னையில் நடத்திய அகநானூறு மாநாடு கரந்தைக் கவியரசு அவர்கள் தலைமையில் 15-4-1940இல் நடைபெற்றது. கழகம் வெளியிட்டுள்ள நாட்டார்தம் அகநானூற்றுரையில் இவர்தம் பெயரும் இடம் பெற்றுள்ளது; தமிழ்வரலாற்றிலும் நிலைபெற்று விளங்குகின்றது.

"கழகம் 1920இல் தொடங்கி ஐந்தாண்டுக் காலத்தில் அச்சிட்டு வெளியிட்ட அகத்தியர் தேவாரத் திரட்டு உரை, திருக்கைலாய ஞானவுலா உரை, சேக்கிழார் பிள்ளைத்தமிழ் உரை ஆகிய மூன்றும் சைவத் திருமுறை பன்னிரண்டு, மெய்கண்ட சாத்திரம் பதினன்கு ஆகியவற்றிற் பெரும் புலமை பெற்ற சிவநெறிச் செல்வர் கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார், பி.ஏ., அவர்களால் எழுதப் பெற்றவையாகும். அவர்களைக் கொண்டே மூவர் தேவாரம் ஏழு திருமுறைகளும் பண் வரிசையில் பண்ணிற் கேற்பச் சீர் பிரிக்கச் செய்து மூன்று தொகுதிகளாகப் பதிக வரலாறுகளோடும் அற்புதப் படங்களோடும் கண்கவர் வனப்புடையனவாய்க் கழகம் வெளியிட்டுப் பரிசும் பாராட்டும் பெற்றுள்ளது.

சிவத்திரு செட்டியாரவர்கள் பெரியபுராணம் சமய இலக்கியங்கள் ஆகியவற்றை நயம்பட முறையாகப் பாடஞ்சொல்லி வந்தனர். கோவை சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியாரவர்கள் தம் ஆசிரியர் பண்டிதர் திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்களிடமும், பின்பு சிவத்திரு கயப்பாக்கம் செட்டியாரவர்களிடமும் முறையாகப் பெரியபுராணத்தைப் பாடங் கேட்டமையே பெரிய புராண விரிவுரை ஏழு பகுதிகளாக வெளிவரக் காரணமாயிற்று என்று சொன்னல் அது மிகையாகாது. கழகவழி நிலைத்த புகழ் பெற்ற புலவர் வரிசையில் சிவத்திரு செட்டியாரவர்களும் ஒருவராவர்.

வ. சு.

தொல்காப்பியம் கூறும் அறநெறி

[டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச் டி.,

அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.]

(முன் இதழ் ௬௭௨ஆம் பக்கத் தொடர்ச்சி)

3.5. தன்னுடைய மனத்து எவ்வளவு வேட்கை இருந்தாலும் அதனையடக்கிக் கொள்வாளே தவிர, ஒரு பெண் அதனை வாய்விட்டுத் தன் கணவனிடம் கூறுவதென்பது என்றும் இல்லை என்று குறிப்பிடுவது எத்துணை இனிய விதி, எண்ணுங்கள்:[30]

''தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்
எண்ணுங்காலைக் கிழத்திக் கில்லை''

4.1. காதலனை இழந்து வாழும் ஒரு பெண்ணின் நிலையை ஆசிரியர் 'தாபதநிலை' என்று கூறியதுடன் நில்லாது, காதலியை இழந்தானாயின் ஓர் ஆண்மகனும் அவ்வாறு இரங்கி வாழும் தவ வாழ்வு மேற்கொள்வது இன்றியமையாதது என்பதனைத் 'தபுதார நிலை' யாற் கூறக் காண்கின்றோம்.[31]

''காதலி இழந்த தபுதார நிலையும்
காதலன் இழந்த தாபதநிலையும்.''

இவ்வாறு கூறும் தொல்காப்பியரது இல்வாழ்க்கைக் குறிப்புக்கள் அனைத்தும் இன்றைய உலகம் உணர்ந்து பின்பற்றத் தக்க பெருந்திறம் படைத்தவை. தமிழறிந்தார், தம் கட்டுரைகள், பேச்சுக்கள், படைப்புக்கள் அனைத்தினும் இம் மூத்த பெருந்தகையாரின் வாழ்வியற் கருத்துக்களை எடுத்தாளுதலைத் தம் முதற் கடமையாகக் கொள்ளவேண்டும் என்று இங்கு வற்புறுத்திக் கூறுவது தவறாகாது.

4.2. தலைமக்கட்கு ஆகாத பண்புகள் இன்ன என்று எதிர்மறை முகத்தானும் ஆசிரியர் மொழியும் பகுதி இங்குச் சுட்டத் தக்கது:[32]

''நிம்பிரி, கொடுமை, வியப்பொடு, புறமொழி
வன்சொற், பொச்சாப்பு, மடிமையொடு, குடிமை

---

30. மேற்படி—கற்பியல் - 28
31. மேற்படி—புறத்திணையியல் - 77
32. மேற்படி—பொருளியல் - 26

இன்புறல், ஏழைமை, மறப்போடு, ஒப்புமை
என்றிவை இன்மை என்மனர் புலவர்.''

இஃது இருபாலரும் வெறுத் தொதுக்கவேண்டிய இன்னுப் பண்புகளை வரிசைப் படுத்திக் கூறும் வனப்பு உடைய நூற்பாவாக விளக்குகின்றது.

4.3. இல்வாழ்வார்க்குரிய பண்புகளைக் ''கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை'' என்று வாகைப் பகுதியாக ஆசிரியர் சுட்டுவர்.[33]

அடக்கம் உடைமை, ஒழுக்கம் உடைமை, நடுவு நிலைமை, வெஃகாமை, புறங்கூருமை, தீவினையச்சம், அழுக்காருமை, பொறை உடைமை என்ற இப் பண்பு நலன்களே இங்குச் சுட்டப் பட்டன எனக் காட்டும். இளம்பூரணர், திருக்குறள் வழிநின்று எடுத்துக் காட்டுக்கள் பலவும் தந்து விளக்குதல் இங்கு உணரத் தக்கது.[34]

இவ்வாறு முழுவாழ்வு வாழும் பெருந்தகைமை பல்வேறு குறிப்புக்களால் விளக்கப்பட்டுள்ளது. இத்தகைய அறநெறி வாழ்வு வாழ்ந்த தலைமகனும், தலைமகளும் வீட்டு நெறி நின்று அழியாத பேரின்பம் பெறுதல் வேண்டும் என ஆசிரியர் முடித் திருப்பது அவரது திருவுள்ளத்தில் அறநெறிக் குறிப்பு அடிப்புல மாக நின்றமைக்குத் தனிப்பெருஞ் சான்ருக அமைந்துள்ளது.[35]

''காமஞ்சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''

இவ்விடத்துச் ''சிறந்தது பயிற்றலாவது—அறத்தின் மேல் மன நிகழ்ச்சி'' என்று இளம்பூரணரும்,[36] ''சிறந்தது அறம்பொருள் இன்பத்திற் சிறந்த வீட்டின்பம்'' என்று நச்சினர்க்கினியரும்[37] விரிக்கும் உரைகள் மனம் கொளத்தக்கவை. இத்தகைய நல்லின்

---

33. மேற்படி—புறத்திணையியல் - 75

34. மேற்படி—இளம்பூரணர் உரைப்பகுதி

35. மேற்படி – கற்பியல் - 51

36. மேற்படி—இளம்பூரணர் உரைப்பகுதி

37. மேற்படி—பொருள் 162—நச்சினர்க்கினியர் உரைப்பகுதி

பத்தை வேறு வகையால், "அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்" என்று உரைப்பதும் தொல்காப்பியர்க்கு இயல்பே.[38]

4.4. தலைவன் கூற்றுக்களை எல்லாம் எடுத்து இயம்பிய போது, "நன்னெறிப் படரும் தொன்னலப் பொருளினும்" என்று உரைப்பார்.[39] "நன்னெறியாவது—அறம்பொருள் இன்பம் வழுவாத நெறி" என்று விளக்கும் முதல் உரைகாரராகிய இளம் பூரணர், அதன் பொருளை மேலும் இனிது விளக்குவாராக "இதனாற் சொல்லியது அறம்பொருள் இன்பங்களை வழாமல் தன் குலத்திற் கேற்ற மனைவாழ்க்கை" என்று எழுதுவர்.[40] ஆதலின் நன்னெறிப் படர்தலே தக்கது என்று வற்புறுத்தப் பெறுதல் மறக்க வியலாதது. பேச்சுக்கூட, "அருள் முந்துறுத்த அன்புபொதி கிளவி" யாகவே அமைதல் வேண்டும் என்பர் ஆசிரியர்.[41]

5.1. இல்வாழ்க்கையில் தலைப்படும் ஆண்மகனுக்கும் கற்பு உண்டு என்பது ஆசிரியர் கொள்கை. பெண்ணின் கற்பு நலத்தை ஆசிரியர் தொல்காப்பியர் எடுத்துரைத்த முறை மிகமிக இனியது.[42]

> "உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்
> செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று எனத்
> தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு"

"கற்பே ஒரு பெண்ணிற்கு உயிரினும் சிறந்தது" என்ற தலை சிறந்த பண்பாடு இங்கு அழகு சிறந்து விளங்குகின்றது. இத் தகைய கற்பை ஆண் மகனுக்கும் ஆசிரியர் விதித்துள்ளார் என்பது பலரும் அறியாத ஒன்றாக உள்ளது. ஆம்; "பிறனில் விழை யாமை"யே அது. வள்ளுவர் ஓர் அதிகாரமாக[43] விரித்துரைத்த ஆண்மக்கள் கற்பே தொல்காப்பியனாரால்,

> "கடிமனை நீத்த பாலினானும்"

என்று சுட்டப்பட்டுள்ளது.[44]

---

38. மேற்படி—பொருளியல் - 47
39. மேற்படி—கற்பியல் - 5
40. மேற்படி—இளம்பூரணர் உரைப்பகுதி
41. மேற்படி—கற்பியல் - 20
42. மேற்படி—களவியல் - 23
43. திருக்குறள்—பிறனில் விழையாமை - 15
44. தொல்.—புறத்திணையியல் - 75

5.2. "ஆண் எல்லாம் கற்பை விட்டுத் தவறுசெய்தால், அப்போது பெண்மையும் கற்பு அழிந்திடாதோ" என்று புதுமைக் கவிஞன் பாரதி கேட்டு, "வீட்டைச் சுட்டால் நலமான கூரையுந்தான் எரிந்திடாதோ" என்று நம்மை வினவி, இருபாலர்க்கும் கற்பு உண்டு என்று நிறுவியிருப்பதற்கு[45] வித்து எது? ஆசிரியர் தொல்காப்பியரது இத் திருவாக்கே என்று கூறினல் அது மிகையன்று :

"கடிமனை நீத்த பக்கம்; அஃதாவது பிறர்மனை நயவாமை. மேல் காமம் நீத்த பாலினுனும் என்று ஓதுகின்ருர் ஆகலின் இது மனையறத்தின் நின்ருரை நோக்கவரும்" என்ற மேற்படி நூற்பாவின் இளம்பூரணர் உரை இதனை மிகத் தெளிவாக உணர்த்துகின்றது.[46] ஆதலின் ஆண்மக்கள் 'பிறர்மனை நயவாப் பேராண்மைப் பெற்றி உடையவராக வாழ்தல் வேண்டும்" என்பது தொல்காப்பியர் திருவுள்ளம் ஆதல் வெளிப்படை.

6.1. அவையத்தில் வீற்றிருந்து அறம் உரைப்பார்க்கு இருக்கவேண்டிய தகுதி இயல்புகளை ஆசிரியர் எட்டு வகையாற் கூறியுள்ளார்.[47] "எட்டுவகை நுதலிய அவையத்தானும்."

இதன்கண் குறிக்கப்பட்ட எட்டியல்புகளை இளம்பூரணர் பின்வருமாறு குறித்து, "ஆசிரிய மாலை" என்ற அரும்பனுவலினின்றும் ஓர் அழகிய திருப்பாட்டையும் அதற்கு இலக்கியமாகக் குறித்துள்ளமை இங்குச் சுட்டத்தக்கது : (1) குலப்பிறப்பு (2) கல்வி (3) ஒழுக்கம் (4) வாய்மை (5) தூய்மை (6) நடுவு நிலைமை (7) அழுக்காருமை (8) அவாவின்மை.

இந்த எட்டும் உடையவரே அவைக்கண் வீற்றிருந்து அறம் வழங்கும் திறம் உடையார் ஆவர். இக் கால உலகிற்கு இதனினும் பயன் தரத்தக்க நல்லுரை உண்டோ? அறங்கூறவையத்தே இதற்கு மாந்தர் இல்லாததனுல் வரும் இடர்கள் எண்ணற்றன. கையூட்டுப் பெற்றுக்கொண்டோ, கண்ணேட்டத்திற்கு உட்பட்டோ இவ்வியல்புகளினின்றும் பிறழ்வோரால் நாட்டிற்கும் மன்பதைக்கும் வரும் கேடுகளை எடுத்துரைத்தலும் வேண்டுமோ? தொல்காப்பியத் திரு நூலின் இவ்வகைய மாந்தர் பண்புகளை இவர்கள் உளங் கொள்வாராயின், மன்பதை ஒழுக்கம் தலை நிமிர்ந்து ஓங்க வழி உண்டு அன்றே?

---

45. பாரதியார் கவிதைகள்—பாரதி அறுபத்தாறு

46. தொல்.—புறத்திணையியல் – 75 இளம்பூரணர் உரைப்பகுதி

47. மேற்பாடி உரைப்பகுதி

7.1. துறவுநெறி மேற்கொள்வோர்க்கும் ஆசிரியர் வழிகாட்டியுள்ளார்:

"அருளொடு புணர்ந்த அகற்சி"[48]

"நில்லா வுலகம் புல்லிய நெறித்தே"[49]

"நாளது சின்மையும் இளமைய தருமையும்
தாளாண் பக்கமும் தகுதிய தமைதியும்
இன்மைய திளிவும் உடைமைய துயர்ச்சியும்"[50]

"நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம்"[51]

முதலியவற்றை இந் நெறியிற் சிந்திக்க வேண்டும். 'நிலையாமை உடையது இவ்வுலகம்; 'ஐம்' பெரும் பூதங்களால் ஆகியது இது" என்ற உண்மைகளை உணர்ந்திருப்பதுடன் அருள் முதலிய உயிர்ப் பண்புகட்கு உறைவிடமாக இவர்கள் இருத்தல் வேண்டும் என்பது இந் நல்லாசிரியர் கருத்து. "அருளொடு பொருந்தின துறவு' என்று எழுதும் இளம்பூரணர், "அருள் உடைமை, கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, புணர்ச்சி இன்மை, கள்ளுண்ணாமை, துறவு என இவற்றை விரித்தெழுதுவது இங்கு உணரத்தக்க ஒட்பம் உடையதாகும்.[52]

துறவிகள் பொருள் ஆசை கொண்டு வாழ முற்படுதல் தக்கதன்று; இது தொல்காப்பியரால் வற்புறுத்தப் பட்டது என்று உணர்தல் இக் கால நிலைக்கு ஏற்றதாகும். "பொருளொடு புணர்ந்த பக்கம்" வேருகவும், "அருளொடு புணர்ந்த அகற்சி" வேருகவும் பிரித்து ஓதப்பட்ட நிலை இப் பெரு நூலுள் உள்ளமை நம்மை இந் நெறிக்கண் இவ்வாறு சிந்திக்கத் தூண்டுகின்றது. 'பொருட்பற்றுக் கொண்டு வாழ்வோர் உண்மைத் துறவிகள் ஆகார்' என்பதே இவ் வரிகளில், தமிழ் மாந்தர்க்கு ஆசிரியர் வற்புறுத்த விழைந்த கருத்தாதல் தெளிவு.

8.1. அறநெறியைச் சான்ரோர் மன்பதைக்கு அவ்வப்போது உணர்த்தி வருவர். அவ்வாறு அவர்கள் கூறுதல் வன்முறை, மென்முறை ஆகிய இரு நிலைகளிலும் அமைதல் உண்டு.

---

48. மேற்படி உரைப்பகுதி
49. தொல்.—புறத்திணையியல் - 76
50. மேற்படி—அகத்திணையியல் - 44
51. மேற்படி—மரபியல் - 91
52. மேற்படி—புறத்திணையியல் - 75

அவற்றுள் வலிதாகச் சொல்லும் முறையே "வாயுறை வாழ்த்து" என்று கூறப்படும். அவ் வாயுறை வாழ்த்துக்கள் வேம்பும் கடுவும் போல வெஞ்சொல் உடையனவாக இருந்தாலும், பின்னே நலம் பயக்கும் பெற்றி கருதி ஓம்படைக் கிளவிகளாக அவற்றை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று உணர்த்துகின்றார் நம் நல்லாசிரியர்:[53]

"வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதல் இன்றி வழிநனி பயக்கும் என்று
ஓம்படைக் கிளவி வாயுறுத் தற்றே"

திருக்குறள் இத்தகைய வன்முறையையும் ஆங்காங்கு மேற் கொண்டு அறம் கூறுதலின் வாயுறை வாழ்த்திற்கு ஏற்ற எடுத்துக் காட்டாயிற்று.

9. தொல்காப்பியப் பொருளதிகாரத்துக் கூறப்பெறும் இத்தகைய நன்னெறிக் குறிப்புக்கள் இக் கால மாந்தரால் அறிந்து பின் பற்றத்தக்க திறம் உடையவை. இவற்றால் மாந்தர் அறம் அறிந்து வாழும் வாழ்வு உளதாகும்; இல்வாழ்க்கையில் தொல் காப்பியர் கூறும் குறிப்புக்களை ஆழ்ந்து உளங்கொண்டு வாழ்ந் தால், 'மணவாழ்வுக் கோளாறுகள்' வழி நிகழும் மணமுறிவு (divorce) முதலியவை நாட்டிலிருந்து நீங்க வாய்ப்பு உண்டு. ஒருவனோடு ஒருத்தியாக இனிது வாழ்ந்து, 'வாழுகம் என்னும் செருக்குடன்' வாழ்ந்து[54] பேரின்பம் தலைப்படுவர். கருவயிற்று உறூஉம் காலம் அறிந்து இந் நல்லாசிரியர் கூறும் கால வாய்ப் பைப் ("பூப்பின் புறப்பாடு ஈராறு நாள்") பயன்படுத்துவராயின்,[55] குடும்பத்திட்டப்பாடு (Family planning) செயற்படுவதில் வெற்றி காணும் நிலை விளையும். இக் குறிப்பு 'மக்கட் பெருக்கச் சிக்கல்' (Population) தீர்வதற்குத் தொல்காப்பியம் காட்டும் உயரிய குறிப்பாகவும் அமைதல் தெளிவு. தொல்காப்பியர் பால் உணர்ச்சி இயல் பற்றிக் குறிப்பிட்டுள்ள குறிப்புக்கள் இக் காலப் புதுச் சிந்தனையாளர்களும் விழித்து நோக்கி வியத்தற்குரிய அடிப்படை பெற்று விளங்குகின்றமை அறிஞர் உலகம் அறிந்ததே ஆகும். கணவன் மனைவியர் வாழ்வு, துறவியர் வாழ்வு, போர் வீரர் வாழ்வு முதலிய மன்பதைப் பாகுபாட்டினர் பலருடைய வாழ்விலும் பின் பற்றத்தக்க பெருநெறிக் குறிப்புக்களாக இவை அனைத்தையும் கருதலாம். இவ்வுரையின் முதற்கண் குறிப்பிட்டபடி எழுத்துச் சொற்பொருள் இலக்கணங்களுக்காக மட்டும் கற்றல் என்பதின்றி வாழ்வு நெறி மேம்பாட்டிற்காகவும் தொல்காப்பியக் கல்வி பெருக வேண்டும் என்பது இதுகாறும் ஆராய்ந்தவற்றால் தெளிவாகும்.

---

53. மேற்படி—செய்யுளியல் - 108
54. திருக்குறள்—தனிப்படர்மிகுதி - குறள் 3
55. தொல்—கற்பியல்-46.

திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி

(முன் இதழ் ௪அகூஆம் பக்கத் தொடர்ச்சி)

காவல்துறை பற்றி எழுதிய அவர்களே 'தீயணைப்புப் படை' பற்றியும் எழுதுதல் வேண்டுமென்று கழகப் பொதுமேலாளர் தம்மிடம் தெரிவித்ததாக அவர்கள் சொல்லியதைக் கேட்டு, ஆம்: அதனைக் கட்டாயம் தாங்கள் எழுதுதல் வேண்டுமென்று ஆட்சியாளர் வேண்டியுள்ளார்கள்.

கழக ஆட்சியாளர் பள்ளி மாணவர்கட்குப் பயன்படும் வகையில் 321 நூல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை அட்டைப் பெட்டியில் வைத்துக் கண்ணுடிப் பேழையில் அழகுற அமைத்துப் பள்ளிகட்கு வழங்கி வருகின்றனர். அப்பேழைக்குக் கழகம் முன்னரே வெளியிட்டுள்ள நூல்களே அல்லாமல் புதிய தலைப்புகளில் சில நூல்களைப் பள்ளி மாணவர்க்கேற்ற முறையில் எழுதி வெளியிடவேண்டுமெனக் கருதினர்கள். ஆட்சியாளர் விருப்பப்படி திரு. வேலன் அவர்கள் இளைஞர்க்கான பெரியபுராணக் கதைகள், இளைஞர்க்கான திருவிளையாடற்புராணக் கதைகள், இளைஞர்க்கான புத்தமதக் கதைகள், தமிழ்நாட்டு மேதைகள் ஐவர், அறிவியல் மேதைகள் நால்வர், அரசியல் தலைவர்கள் என்ற தலைப்பில் 2 நூல்கள் ஆகியவற்றைக் காலத்திலே எழுதித்தந்து ஆட்சியாளர்க்கு மகிழ்ச்சியூட்டினர்.

அவர்கள் 1938ஆம் ஆண்டில் எழுதிய புதியது புனைந்த அறிவியல் அறிஞர்கள் என்ற நூல் பள்ளியிறுதி வகுப்புக்கு ஓர் ஆண்டு பாடமாக வைக்கப்பெற்றது. அவர்கள் நெப்போலிய வீரன், காந்தி அடிகள், தொழில் தந்தையர், தமிழ்ப் பேரறிஞர் பா. வே. மாணிக்கநாய்க்கர் ஆகியோர் வரலாறுகளைப் படிப்பவர்க்கு எழுச்சியூட்டும் வகையில் எழுதியிருப்பது போற்றுதற்குரியது.

பள்ளி மாணவர்கள் தமிழ் நாட்டை ஆண்டுவந்த சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வரலாறுகளைப் படித்தறிய வேண்டுமென்று ஆட்சியாளர் அவாக்கொண்டனர். அவர்கள் விருப்பப்படி சோழர் ஆட்சி, சேரன் ஆட்சி, நாயக்கர் ஆட்சி, பாண்டியர் ஆட்சி ஆகிய நான்கு நூல்கள் எழுதியுள்ளனர். பல்லவர் ஆட்சி மட்டும் கழகப் புலவர் ஒருவரால் எழுதப்பெற்றுள்ளது.

நமக்கு உரிமை கிடைத்ததின் பின்னர் மாநில அரசுக்கும், நடுவண் அரசுக்கும் ஆட்சிமன்றங்கட்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை வந்தது. நமது தேர்தல் முறை பற்றி மக்களுக்குத் தெரியவேண்டுவது இன்றியமையாமை ஆகிவிட்டது. எனவே 'நம் நாட்டுத் தேர்தல் முறை' என்ற தலைப்பில் நூல் ஒன்று எழுதித்தருமாறு ஆட்சியாளர் திரு. வேலன் அவர்களை வேண்டவே அவர்கள் அதுபற்றி எழுதிய நூல் கழகவழி வெளியிடப் பெற்றுள்ளது.

திரு. வேலன் அவர்கள் பொதுவாகக் கடவுள் பற்று மிக்குடையாரெனினும் முருகப்பெருமானிடத்தில் தனிப்பெரும் பற்றுடையவர் என்பது முன்னரே குறிக்கப்பெற்றுள்ளது. செந்தமிழ்ச் செல்வியில் முருகனைப்பற்றிச் சிற்சில கட்டுரைகள் எழுதியுள்ளார். ''முருகன் திருவருள்'' என்று அவர்கள் எழுதிய நூல் கழக வழி வெளியிடப்பெற்றது அவர்கட்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது. அவருடைய ஊற்றுப் பேனாவுக்கு நிரம்ப வேலை கொடுக்க வேண்டுமென்பதே ஆட்சியாளரின் பெருவிருப்பமாகும்.

இறைவன் திருவருள் துணை புரிக.

'வள்ளுவர் கோட்டம் ஒரு வையகப் புதுமை'

இந் நூல் முதன் முதல் கழகப் பொது மேலாளர் கருத்தின்படி ஆக்கப்பெற்றுப் படங்களுடன் வெளியிடப்பெற்றது. பின்னர் அதனைத் தெலுங்கிலும், ஆங்கிலத்திலும், மொழிபெயர்க்கச் செய்து இருநூல்கள் கழகவழி வெளியிடப்பெற்றன.

சென்னையில் ''வள்ளுவர் கோட்டம்'' திறக்கப்பெற்றபின் திரு ஆட்சியாளர் அவர்கள் உள்ளத்தில் சிறுவர்கள் நடிப்பதற்கேற்றவாறு 'திருவள்ளுவர் நாடகம்' நூல்வடிவில் வெளியிட வேண்டுமென்று தோன்றியது.

கிடைக்கப்பெற்ற ஒரு சில சான்றுகளைக்கொண்டு சிறுவர்கள் திருக்குறளைப் பயின்று நல்வாழ்வு பெறுதல் வேண்டுமென்று கருதி அவர்தம் வரலாற்றை நாடகமாகச் சிறுவர் விரும்பிப் படிப்பதற்கும், நடித்தற்கும் ஏற்ற வகையில் எழுதித்தரும்படி சிறுவர்க்குப் பல நூல்களை எழுதிய திரு. வேலன் அவர்களைக் கழக ஆட்சியாளர் வேண்டினர். அவர்களும் அதற்கிசைந்து ''சிறுவர்க்கான திருவள்ளுவர் நாடகம்'' என்ற நூலை உருவாக்கித் தந்தனர். கழகப் புலவர்கள் அந்நாடகத்தின் காட்சி அமைப்புக்களைச் செம்மைப்படுத்தியதோடு, காட்சி தோறும் பொருத்தமான

திருக்குறட் பாக்களை இடம்பெறச் செய்தனர். அந்நூல் 1976 நவம்பர்த் திங்களில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

திருக்குறள் நாடகம்

(காமத்துப்பால்)

இதன் ஆசிரியர் பல அரிய ஆய்வு நூல்களை எழுதிப் புலவர் பெருமக்கள் பாராட்டுதலைப் பெற்று வருபவராகிய **மயிலை சீனி வேங்கடசாமி** அவர்களின் தமையனார் செந்தமிழ்ப் பேரறிஞர் **மயிலை சீனி கோவிந்தராசன்** அவர்கள் ஆவர். அவர்களும் **பேராசிரியர் கா நமச்சிவாய முதலியார்** அவர்களும் தமிழ்ப் பெரும்புலவர் **திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை** அவர்களிடம் முறையாகப் பாடங் கேட்ட ஒருசாலை மாணாக்கர்கள் ஆவர்.

அவர்கள் எழுதிய கட்டுரைகள் சில செந்தமிழ்ச் செல்வியில் வெளியிடப் பெற்றிருக்கின்றன. தாம் எழுதிய திருக்குறள் நாடகம் அச்சிடப் பெறுதற்கு முன்பே அவர்கள் இறையடி சேர்ந்துவிட்ட னர் என்பது மிகவும் வருந்துதற்குரியது. எனினும் அவர்கள் பிரிவுக்குப்பின் அவர்களிடம் தமிழ் பயின்ற மாணவர் **மயிலை மா. மாணிக்கவேல் முதலியார்** அவர்களால் தம் மைத்துனர் நடத்தி வரும் சிவகாமி விலாச அச்சுக் கூடத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. அப்போது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை லிங்கிச் செட்டித்தெரு 306ஆம் எண் கட்டிடத்தின் மாடியிலும் சிவகாமி விலாச அச்சுக்கூடம் கீழ் வீட்டிலும் இருந்தன.

அந் நூலின் அருமையை நோக்கிக் கழக ஆட்சியாளர் முயற்சியினால் **மறைத்திரு மறைமலையடிகளார்**, பேராசிரியர் **கா. சுப்பிரமணிய பிள்ளை**, பேராசிரியர் **அனவரதவிநாயகம் பிள்ளை**, பேராசிரியர் **மு. சி. பூரணலிங்கம் பிள்ளை**, பண்டித **ந. மு. வேங்கடசாமி நாட்டார்**, **பாப்பினி துரை** முதலியோரிடம் மதிப்புரை வாங்கப்பெற்றது.

1967 வரை நான்கு பதிப்புக்களைப் பெற்றிருக்கின்ற இந் நூல் விற்பனைக்குக் கிடைக்கப் பெறவில்லை. ஆதலால் அதனை வெளியிடும் வாய்ப்பு 51 ஆண்டுகட்குப்பின் கழகத்துக்குக் கிடைக்கப்பெற்றது. அச்சிடுவதற்காக அதனைச் சரிபார்த்தபோது காமத்துப்பால் 250 குறட்பாக்களில் ஒன்று விடப்பட்டிருப்பதும், பிழைகள் பல இருப்பனவும் காணப்பட்டன. எனவே அச்சிடுவதற் கேற்றபடி கழகப் புலவர்களைக் கொண்டு களவியல் இலக்கணத் திற்கு ஏற்பச் செம்மைப்படுத்தி 1977 பிப்ரவரித் திங்களில் கழக வழி வெளியிடப்பட்டது.

நூலின் இறுதியில் இந் நாடகத்தில் வந்துள்ள அகப் பொருள் கிளவிகளுக்குரிய விளக்கம் கொடுக்கப் பெற்றிருக்கின்றது. இந் நூலின்கண் துறை விளக்கப்படங்கள் சில அச்சிட்டுச் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. திருக்குறள் காமத்துப்பாலைப் பேரறிஞர் பலர் எழுதிய உரை விளக்கங்களைக் கொண்டு படித்துப் பெறும் இன்பத்தைவிடப் பன்மடங்கு இந் நாடக நூலைக்கொண்டு பெறலாம் என்று இதனைப் படித்தவர் உள்ளபடியே கூறுவது மிகையாகாது. இத்தகைய அரிய நாடக நூலை இயற்றிய மயிலை சீனி கோவிந்தராசன் அவர்களை இளமையிலேயே தமிழுலகு இழக்க நேர்ந்தது. மிகமிக வருந்துதற்குரியது. ஆனால் அவர் புகழ் நூல்வழி என்றும் அழியாது நிலைத்துநிற்கும் என்பது உறுதி.

Tirukkural Couplets

(Pocket Size)

(ஆங்கிலத்தில் ஈரடி அமைப்புக் குறள்)

அறிஞர் எட்வர்ட் ஜுவிட் இராபின்சன் என்பவர் திருக் குறளில் அறத்துப்பால், பொருட்பால் ஆகிய இரண்டினையும் ஈரடி களில் எளிய இனிய நடையில் மொழி பெயர்த்தமைத்திருக்கின்றார். அம் மொழி பெயர்ப்பு அவர் இயற்றிய தென்னிந்தியக் கதைகளும் பாக்களும் (South Indian Tales and Poems) என்ற நூலில் காணப் பெறுகின்றது. அவர் காமத்துப் பாலுக்கும் எழுதி இருப்பின் ஒரே நடையில் ஒரே அமைப்பில் நூல் முழுமையும் வந்திருக்கும். அது தமிழருக்கு ஏற்பட்ட ஒரு பெருங்குறைதான். எனினும் அதனை எப்படி நிறைவுபடுத்துவது என்று ஆட்சியாளர் கருதினர்.

ஆங்கிலத்தில் இராபின்சன் அவர்களைப்போல் வேறு எவரும் அவ்வளவு சுருக்கமான அளவில் மொழிபெயர்க்கவில்லை. ஆதலால் புகழ்பெற்ற ஆங்கிலப் பெருமகனார் டாக்டர் ஜி. யு. போப் அவர்கள் மொழி பெயர்த்த திருக்குறளில் உள்ள காமத்துப்பால் பகுதியை இந் நூலின்கண் சேர்ப்பதைத் தவிர வேறுவழியில்லை.

ஆட்சியாளர் அதனை எப்படி அமைப்பது என்று கருதிய போது அவர்கட்கு மனத்தின்கண் தெளிவு ஒன்று ஏற்பட்டது. டாக்டர் போப் அவர்கள் 109ஆம் எண் அதிகாரத்தையும் 132ஆம் எண் அதிகாரத்தையும் ஒரு நெறிப்பட நாலுவரிகளில் மொழி பெயர்த்து அமைத்துள்ளார்கள். பிற அதிகாரங்களை ஈரடிகளி லேயே அமைத்திருக்கின்றனர். டாக்டர் போப் அவர்கள் மொழி

பெயர்ப்பில் ஒவ்வோர் அடியும் மிகவும் நீளமாய் இருப்பதற்கு அவர்கள் திருக்குறள் பொருள் முழுவதையும் தெளிவுபடுத்த வேண்டும் என்று கருதினர். எனவே சொற்கள் பெருக்கமுற்று வரி நீள்வதற்குக் காரணமாயிற்று.

இராபின்சன் அவர்களோ, கருத்துச் செறிவினை மட்டும் புலப் படுத்தும் வகையில் சொற்சுருக்கத்தில் ஆக்கியுள்ளனர். அதனால் கருத்து முழுமையும் தெளிவுற அதன்கண் அமையவில்லை என்பது அறிதற்பாலது.

இந் நிலையில் ஆட்சியாளர் ஆங்கிலச் செய்யுள் நூல்கள் கையடக்கப்பதிப்பாக வெளியிடப் பெற்றிருப்பவற்றைப் பார்த்து அவற்றின்படி டாக்டர் போப் இயற்றிய திருக்குறள் காமத்துப்பால் மொழிபெயர்ப்பினையும் அமைக்கலாம் என்ற முடிவுக்கு வந்தனர். அந்தப்படி ஆங்கிலங் கற்றவர்கள் உள்ளம் உவப்பப் படிக்கும் வகையில் திருக்குறள் பாக்களை அமைத்து அச்சிட்டு உள்ளனர்.

திரு இராபின்சன் அவர்கள் தமது மொழிபெயர்ப்பில் சில பாக்களுக்கு அடிக்குறிப்பில் சில விளக்கம் கொடுத்துள்ளனர். அவை கழகப் பதிப்பின் இறுதியில் தனித் தலைப்பில் பொருத்த மான முறையில் அச்சிடப்பெற்றிருக்கின்றன. அப் பதிப்புக்கு சாந் தோம் கத்தோலிக்க அருள் இல்லத் தலைவர் தவத்திரு ஆர் அரு ளப்பா அவர்கள் மனம் உவந்து அணிந்துரை வழங்கியுள்ளனர். இப் பதிப்பு அழகிய அட்டைக் கட்டுடனும் பரிசு கொடுப்பதற் கேற்றபடி உயர்ந்த ரெக்சைன் கட்டுடனும் செய்யப்பட்டு விற்கப் பெறுகின்றது. வெளிநாடுகட்குச் செல்பவர்கள் டாக்டர் போப் அவர்கள் திருக்குறள் மொழிபெயர்ப்பை வாங்குவதோடு, திருக் குறள் கையடக்கப் பதிப்பையும் வாங்குகின்றனர் என்பது மிக்க மகிழ்ச்சியோடு இங்கே தெரிவிக்கப்பெறுகின்றது.

வானொலியில் வள்ளுவர் ஓவியங்கள்

இதனை இயற்றியவர் நெல்லை ம. தி. தா. இந்துக் கல்லூரி தமிழ்த் துறையில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வரும் திருவாளர் வித்துவான் கோ. வே. பெருமாள் எம். ஏ., பி. டி. ஆவர். இதன்கண் திருக்குறளில் உள்ள 133 அதிகாரங்களில் செய்ந் நன்றி அறிதல், அடக்கமுடைமை, அறன் வலியுறுத்தல், தெரிந்து தெளிதல் ஆகிய நான்கு அதிகாரங்கள் மட்டும் எடுத்து வானொலி யில் பேசுவதற்காக எழுதப் பெற்றனவாகும்.

வானொலியில் கேட்பவர் எத்துறையினராயினும் மகிழும் வண்ணம் தொடக்கவுரை, நிகழ்ச்சி உரையாடல், நிறை உரை ஆகிய மூன்று தலைப்புக்களில் பேசுவதற்கேற்ப எழுதியுள்ளனர். முதல் இரண்டு அதிகாரங்களும் திருச்சி வானொலி நிலையத்தில் 1969, 1970 சனவரித் திங்களில் பேசப்பெற்றன. அவற்றைக் கேட்ட ஆசிரிய நண்பர்களும் மற்றும் தெரிந்தோர் சிலரும் அவற்றை நூல் வடிவில் கொண்டுவரின் நன்கு பயன்படுமென்று கேட்டுள்ளமையால் பின் இரண்டு அதிகாரங்கட்கும் முன்பு எழுதியபடியே எழுதி முடித்தனர். அந் நான்கும் கழகவழி 1978ல் "வானொலியில் வள்ளுவர் ஓவியங்கள்" என்ற தலைப்பில் அழகுற நூல் வடிவில் வெளியிடப்பெற்றன.

கழகம் அமைத்த திருக்குறள் காட்சி

வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவுக்குப்பின் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமும் தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்கள் மூன்றும் ஒருங்கிணைந்து 1976 சூலைத் திங்கள் 9, 10, 11 ஆகிய மூன்று நாள்களிலும் நடத்திய கருத்தரங்கை யொட்டிக் கழகம் 'திருக்குறள் காட்சி' அமைத்தது. பலவேறு மொழிபெயர்ப்பு நூல்களும், உரை நூல்களும் பதிப்புக்களும் நூலாசிரியர் உருவப் படங்களுடன் மறைமலையடிகள் நூல்நிலையத்தின்வழிக் காட்சி அமைத்தது. ஏறத்தாழ 15,000 பேர் குறள் காட்சியைக் கண்டுகளித்தனர், அப் போதைய ஆளுநர் மாண்பமை மோகன்லால் சுகாதியா அவர்கள் தமிழக அரசுத் தலைமைச் செயலர் உயர்திரு வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எசு. அவர்களோடு வந்து காட்சியைப் பார்வையிட்டுப் புகழ்ந் தனர்.

1968இல் கழகம் சென்னைமாநகரில் சிறப்பாக நடத்திய திரு வள்ளுவர் திருநாள் விளாவிலே வெளியிடப்பெற்ற மலரின்கண் ஆளுநர் அவர்களே இராசத்தான் முதலமைச்சராக இருந்து எழுதி யனுப்பிய வாழ்த்துரை இடம்பெற்றிருப்பதை ஆட்சியினர் உவகை யோடு எடுத்துக் காட்டி அம் மலரினை அன்பளிப்பாக வழங்கினர்.

அடுத்து 15-1-78, 15-1-79 ஆகிய இரண்டாண்டு திருவள்ளுவர் விழா வள்ளுவர் கோட்டத்தில் நடந்தபோதும் தமிழக அரசு விரும்பியபடி 'திருக்குறள் காட்சி' அமைக்கப்பெற்றது. மாண்புமிகு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், **ஆளுநர் பட்வாரி** அவர்களும் காட்சியைக் கண்டு பெருமகிழ்வுற்றனர். அடுத்து 15-4-1979இல் கன்னியாகுமரியில் நடைபெற்ற திரு வள்ளுவர் சிலை—நினைவாலயம் கால்கோள் விழாவிலே காந்தி மண்டபத்தில் அரசினர் வேண்டுதலின்படி மறைமலையடிகள் நூல்நிலைய வழித் திருக்குறள் காட்சியினைச் சிறப்பாக அமைத்தது. மத்திய எரிபொருள் அமைச்சர் மாண்புமிகு பா. இராமச்சந்திரன் அவர்கள் காட்சியைத் திறந்துவைத்துப் பாராட்டினார்கள்.

தன்மானம் தழைக்க

[தாமரைச் செல்வர் நெ. து சுந்தரவடிவேலு]

உயிர் வகைகள் பல. அவை பெற்றுள்ள அறிவு நிலைகளும் பலவாகும்; ஓரறிவு, ஈரறிவு, மூன்றறிவு, நான்கறிவு, ஐந்தறிவு, ஆறறிவு, என வெவ்வேறு அறிவுத் தொகுப்பினைப் பெற்றுள்ளன. மக்கள் இனம் மட்டுமே, ஆறுவது அறிவையும் பெற்றுள்ளது. அவ்வறிவுக்குப் பெயர் பகுத்தறிவு. அதன் துணைகொண்டு, மக்கள் இனம் பெற்றுள்ள வளர்ச்சியோ வியக்கத்தக்கது.

நல்லது, கெட்டது என்று பகுத்தறியும் அறிவு நமக்கு மட்டுமே உண்டு. நமக்கு நன்மையாக இருப்பது, பிறருக்குத் தீமையாக இருப்பதைக் காட்டுவதும் ஆறுவது அறிவே. இவ் விளக்கமே, பிறர் நலத்திற்காகத் தன்னலத்தைத் துறக்கும் அறவோர்களை உருவாக்குகிறது.

சிறு விதைக்குள் பேராலமரம் உறங்கிக் கொண்டிருக்கும்; முளைத்து வளரக் காத்துக்கொண்டிருக்கும். அதேபோல், மனிதக் குழந்தைக்குள், சிறுவருக்குள் இளைஞருக்குள், வளரக் காத்துக் கொண்டிருக்கிறார் ஆறும் அறிவைப் பயன்படுத்தும் அறவோர்.

கல்வி என்பது கருவி. எதற்குக் கருவி? அறிவு விளக்கத் திற்குக் கருவி; எது நமக்கு மட்டும் நல்லது? எது பலருக்கும் நல்லது? இவற்றைக் காட்டும் கருவியாகப் பயன்படுவது கல்வி.

வாழக் கற்றுக் கொடுப்பது கல்வி. வாழ்க்கைக்கு வேண்டிய தொரு வேலையை, தொழிலை, அலுவலைக் கற்றுக்கொடுப்பது கல்வி. மனித உருவில் பிறந்தவர்கள் மனித அறிவை வளர்த்துக்கொள்ள, மனித உணர்வைப் பெற்றுக்கொள்ள, மனிதனுக்குரிய மாட்சியோடு வாழத் துணைபுரிவது கல்வி.

இதை உணர்ந்தே, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, திருவள்ளுவர் கல்விபற்றி ஓர் அதிகாரமும் அடுத்து கல்லாமை பற்றி, ஓர் அதிகாரமும் பாடினார். இவ் வதிகாரங்கள் எங்கே அமைந்துள்ளன? பொருட்பாலில் அமைந்துள்ளன. இறை மாட்சிக்கு அடுத்து அமைந்திருப்பது சிறப்பாகக் கருதத்தக்கதாகும். அறத்துப்பாலில், கல்வியைச் சுட்டிக் காட்டாமல் பொருட்பாலில் சுட்டிக் காட்டுவானேன்? 'எப்படியோ அறத்துப்பாலில் விடுபட்டது; ஆகவே பொருட்பாலில் நுழைந்தது' என்று கருதுவதற்கு இல்லை.

மனிதன், தூய்மை பெற்று ஒளிவிட வேண்டிய தனி ஆள்; அவனே ஊரோடும் உலகத்தோடும் ஒட்டி வாழ்ந்து, வாழவைத்து, பின்பற்றி, முன்னேறி, சிறக்கவேண்டிய சமுதாய உறுப்பினன் ஆவான்.

பிந்திய கடமையைச் செம்மையாக ஆற்றவே, கல்வி, அதிகம் தேவைப்படலாம். கல்வி என்பது தனி ஆள் தேவை என்பதை விட சமுதாயத் தேவை என்பதே பொருத்தம். எனவே மக்களின் சமுதாய இயல் பற்றிய பொருட்பால், கல்வி பற்றிப் பேசுகிறது. பிறவி இறைக்கும் தேர்வு இறைக்கும் பொருந்தும் சில அடிப் படைத் தன்மைகளைக் கூறியதும் அவற்றை உறுதிப்படுத்தும் கல்வியைப் பற்றிக் கூறுகிறது திருக்குறள்.

வள்ளுவர் கூறுவதுபோல், கல்வியே செல்வங்களில் எல்லாம் சிறந்தது; கேடில்லாதது. கற்றவர்களே கண்ணுடையவர்கள். நீட்டோலை வாசியா நிற்பவர்களோ? புண்ணுடையவர்கள்; மரத்திற்கு ஒப்பானவர்கள். மீண்டும் மீண்டும் 'மை' ஒற்றும் நிலைக்குத் தள்ளப்பட்டு, இழிவு படுத்தப் படுபவர்கள் மக்களாக மதிக்கப்பட விரும்புவோர், எழுத்தறிவு பெறுதல் இன்றியமை யாதது.

இந் நூற்றாண்டில் அனைத்துலக அவை ஒன்று உருவாகி யுள்ளது. தன்னாட்சி உரிமை பெற்ற நாடுகளைக் கொண்ட அந்த ஐக்கிய நாடுகளின் அவை, 'மக்கள் உரிமைச் சாசனம்' ஒன்றை ஆயத்தஞ்செய்து, வெளியிட்டு, அரசுகள் ஏற்கும்படி செய்யக் காரணமாக இருந்தது.

மக்கள் இனம்பெற வேண்டிய அடிப்படை உரிமைகளில் ஒன்று கல்வி உரிமையாகும். நாடு, மொழி, இனம், சமயம் பால் ஆகிய வேறுபாடுகளைக் கருதாமல், எல்லோரும் கல்விபெறும் உரிமைக்கு ஒவ்வோர் அரசும் உறுதுணை நிற்கவேண்டும். இதுவே கல்வி உரிமை.

இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பு நம் தமிழ் அறவோர் காட்டிய கொள்கையை, இந் நூற்றாண்டு ஏற்றுக் கொண்டது. எல்லா நாடுகளும் முழுமையாகச் செயல் படுத்தினவா? இல்லை. பல நாடுகள், வெற்றி எல்லையை நெருங்குவதைக்கூடக் காணோம். எப்படியோ, மெல்ல, தள்ளாடி, நடப்பதே பல நாடுகளின் நிலையாக உள்ளது. அந் நாடுகள், பின்தங்கிய நாடுகளாகவும் உள்ளன. தொழில், பொருள் துறைகளில் முன்னணியில் நிற்கும் நாடுகளில் அநேகமாக எல்லோரும் எழுத்தறிவு பெற்றிருப்பதும் அத் துறை களின் பின்னால் தேங்கும் நாடுகளில், மக்களில் பெரும்பாலோர்

எழுத்தறிவும் பெருதிருப்பதும் தற்செயல் அல்ல. ஒன்ருேடொன்று காரணகாரியத் தொடர்புடையன.

படிக்கத் தெரிந்த உழவர்களிடம் புதுவிதைகள், புதுப்பயிர் முறைகள், புது உரங்கள் ஆகியவற்றைப் பயனுள்ள வகையில் பழக்கப்படுத்துவது எளிதா? ஏதுமறியாத, தற்குறிக் குடியானவர் களிடம் அவற்றைப் பழக்கப் படுத்துவது எளிதா? முந்தையவர்களே எளிதில் ஏற்றுச் செயல்படுத்தி, நன்மையடையும் நிலையில் இருப் பார்கள். விதைக்கவேண்டிய விதையின் அளவு, நீர்ப்பாய்ச்சல், உரமிடல், களையெடுத்தல் பற்றிய கால அட்டவணை அறுவடை முறை முதலியவற்றை அச்சிட்டுக் கொடுத்தால், படிக்கத் தெரிந்த வர்கள், படித்துப் புரிந்து கொள்வார்கள். ஐயம் எழும்போதெல்லாம், அறிக்கை அட்டையைப் படித்து, சரியானபடி செயல்படுவார்கள்.

படிக்காத உழவர்களுக்கு விளக்க அட்டையைப் படிக்க முடியாது. பிறர் படிக்கக் கேட்டாலும் பலபோது நினைவில் நிற்காது. ஐயம் வரும்போது, படிக்கத் தெரிந்தவரைத் தேட வேண்டும். அவர் தயவை நாடி நாணி நிற்கவேண்டும். இது சங்கடமானது; இடர்ப்பாடானது தன்னறிவே, மெய்யறிவு உழவருக்குப் படிக்கத் தெரிந்தால் உடனுக்குடன் விளக்க அறிவிப்பைப் புரட்டிப் பார்க்கலாம். நம்பிக்கையோடும் காலதாமதம் இன்றியும் சரியானபடி செயல்படலாம்.

பிற தொழிலாளிகளின் நிலையும் இதுவே. மொத்தத்தில் கல்வி அறிவு பெற்ற தொழிலாளிகளின் தொழில் திறன் அதிகம். அதிகப்படியான தொழில் திறன், அதிக உற்பத்தி, அதிக விளைச்சலில் முடியும், அதிக உற்பத்தி, பொருள் நிலையை உயர்த்தும். பொருள் வளர்ச்சி, தொடர்ந்து கல்விவளரத் துணைசெய்யும். அவ் வளர்ச்சி, உணர்வுச் செப்பத்திற்கும் பண்பாட்டு உயர்வுக்கும் தூண்டுகோலாகும். எல்லா மக்களும் நிறை கல்வி, பயனுள்ள கல்வி, செயல்படுத்தக்கூடிய அறிவு ஆகியவற்றைப் பெறும்போது, அக் குமுகாயம் ஒளிவிட்டு வாழும். கலவரம், வன்முறை, இன்னு செய்தல் ஆகியவற்றிலிருந்து விடுபடும். மற்றவர்களையும் வாழ விடுவதன், வாழ வைப்பதன் வழியாகவே, தனி மனிதரும் நிறை வாழ்வு வாழமுடியும் என்னும் உணர்வு இரண்டறக் கலந்துள்ள குமுகாயமே மக்கள் இனம் என்னும் சிறப்பிற்குரியதாகும்.

இப்போது, நம் இந்தியர்களின் நிலையைப் பார்ப்போம். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தொன்றும் ஆண்டில் எடுத்த மக்கள் கணக்குக் காட்டுவது என்ன? நூற்றுக்கு எழுபது இந்தி யர்கள் தற்குறிகள்; தாய்மொழி எழுத்தறிவும் பெருதவர்கள் அறி

யாமை, வறுமைக்குத் தோழன், ஆயிற்றே! இந்திய வேளாண்மை குறைந்த பலன் கொடுப்பதாக இருப்பதில் வியப்பென்ன? இந்திய உழவர்கள் கிடைத்த சொற்பக் காசுகளை எதற்கு எவ்வளவு எப்படிச் செலவு செய்வதென்று தெரியாமல், ஊதாரிகளாகக் கெடுவதும் அனைவரும் அறிந்ததே. புத்தி தீட்டக் கற்காதவர்கள், 'கத்தி தீட்ட'த் துடிப்பது இயற்கை. எடுத்ததற்கெல்லாம், குத்து வெட்டில் முனைவதும் எதிர்பார்க்கக் கூடியதே.

அன்னியன் ஆண்டபோது நூற்றுக்கு எண்பத்தைந்து இந்தியர்கள் தற்குறிகள். அதைக் கண்டு காந்தியடிகளார் கதறினர். அந் நிலை நம் நாட்டிற்கு இழிவு என்பதை எடுத்துரைத்தார். கற்றவர்கள் அதைப் பார்த்துக் கொண்டிருப்பது பாவமென்றார். படித்தவர் அனைவரும் முதயோர் எழுத்தறிவுப் பணியில் ஈடுபடவேண்டினர்.

முப்பது ஆண்டுகளுக்குப் பிறகே, அவ் வேண்டுகோள், செயல்படத் தொடங்கியுள்ளது. நாடு தழுவிய முதியோர் எழுத்தறிவு இயக்கத்தை இந்திய அரசு தொடங்கியுள்ளது. இவ்வாண்டு, அண்ணல் காந்தியடிகளாரின் பிறந்த நாளன்று அதற்காகக் கொடியேற்றப்பட்டது. மற்ற நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்படுமென்று, நாட்டுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இந்திய முதியோர் எழுத்தறிவு இயக்கம் என்ன செய்யப் போகிறது? அவரவர் தாய்மொழியில் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கப் போகிறது. எத்தனை பேர்களுக்கு? பத்து கோடி பேர்களுக்கு. அம்மா பெரிது! எவ்வளவு காலத்தில் இதைச் சாதிக்கப் போகிறார்கள்? ஐந்தாண்டுகளில். அப்படியானல் ஆண்டுக்கு இரண்டு கோடி பேர்களை முதியோர் கல்வி மையங்களில் சேர்க்க வேண்டும்.

தமிழ்நாட்டில், ஐந்து ஆண்டுகளுக்குள் அறுபத்தைந்து இலட்சம் முதியவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். அதாவது பதின் மூன்று இலட்சம் பேர்களைச் சேர்க்கவேண்டும்.

சேர்க்க முடியுமா? முடியும். எப்படித் தெரியும். முன்னர் வெள்ளோட்டம் பார்த்தோம் எப்போது? 1969, 1970ஆம் ஆண்டுகளில். எங்கே? தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும், மொத்தம் ஐநூற்று அறுபது சிற்றூர்களில். முடிவு என்ன? இருபது முதியோர்களை எதிர்பார்த்தோம். சராசரி முப்பத்தைந்து பேர்கள் சேர்ந்தார்கள். படித்தார்களா? படித்தார்கள். எவ்வளவு அக்கறையோடு? விதிக்கப்பட்ட பாடநூலில் உள்ள எல்லாப் பாடங்களிலும்

கணக்குகளிலும் தேர்ச்சி பெறும் அளவு. முப்பத்தைந்து பேர்களுமா? இல்லை. இருபத்து மூன்று பேர்கள். இது நல்ல தொடக்கம், பாராட்டத்தக்க சாதனை, எவ்வளவு காலத்தில் பாட நூலை முடித்தார்கள்? நான்கு திங்களில் அதாவது எண்பது நாட்களில். எத்தனை மணிகளில்? எண்பது மணிகளில்.

இப்போதைய திட்டம் பத்துத் திங்கள் திட்டம். எனவே மேலும் ஒரு நிலைக்குக் கொண்டு போகலாம். இரண்டாம் வகுப்பு நிலைவரை கற்பிக்கலாம்.

என்ன சொற்களைக் கற்பிக்க? படிக்கும் முதியவர்களின் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் சொற்களே. அதாவது அவரவர் தொழில் சார்ந்த சொற்கள் கணக்குப்பயிற்சி எப்படியிருக்கவேண்டும்? அதுவும் அவரவர் வேலையை ஒட்டியதாக இருக்கவேண்டும். அப்படியானால் ஒரே பாடநூல், முதியோர் கல்விக்குப் பொருந்தாது. தொழில்கள் பல. அவற்றை ஒட்டிய சொற்களும் பல தொகுப்புகள் ஆகும். கணக்கு வகைகளும் பலவாகும். மேலும் பாண்டி நாட்டு உழவர்கள் வழங்கும் சொற்களுக்கும் கொங்கு நாட்டு உழவர்கள் கையாளும் சொற்களுக்கும் ஓரளவு வேறுபாடு இருக்கும். எனவே, பாண்டிநாட்டு உழவருக்கு ஒரு நூலும் கொங்குநாட்டு உழவருக்கு ஒரு நூலும் ஆயத்தஞ்செய்து பயன்படுத்த வேண்டும்.

முதியோர் எழுத்தறிவு, காந்தியடிகளின் கனவு. அறிஞர் அண்ணாவின் நாற்று. தந்தை பெரியாரின் பெரும் விருப்பம். கற்ற தமிழர்களின் தலையாய கடமை. ஏன்?

''என்னருந்தமிழ் நாட்டின்கண்
எல்லோரும் கல்வி'' கற்றால்?

ஊமையராய், செவிடர்களாய்க்
குருடர்களாய் வாழமாட்டோம்

மாறாக, தமிழர் என்றுசொல்
லுவோம்; தலைநிமிர்ந்து நிற்போம்!
தன்மானம் தானே தழைக்கும்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். —குறள் 393

இயற்கை ஓவியம்—வண்டும் நண்டும்

[இரா. இளங்குமரன்]

பெரிய பெரிய மணல் மேடுகள்; அவற்றுக்கு அழகூட்டும் வகையில் அமைந்த ஆழ்ந்த நீர்த்துறை. நீர்த்துறைக்கு மணல் மலைகள் அழகா? மணல் மலைக்கு நீர்த்துறை அழகா? நீலநீர்த் துறைக்குப் பொன்மணல் மலையும், பொன்மணல் மலைக்கு நீலநீர்த் துறையும் அழகு செய்கின்றன.

ஆழ் துறையின் ஆழத்தில் கிளம்பும் அலை, மேலே ததும்பும்; ஆர்க்கும்; துள்ளும்; போர்க்குதிரை எனப் பந்தி பந்தியாய்த் தாவும்; ஒன்றை ஒன்று முட்டி மோதி வெள்ளிமலை முகடென ஓங்கும்; உடனே சாய்ந்து சரிந்து தாழ்ந்து தவழ்ந்து பொன்மணல் மேட்டில் புரளும். அதன் புரளலை மணல் அரவணைக்கும் அணைப்பு, அருமை அன்னை தன் அன்புக் குழவியை அரவணைத்தலுக்கு ஒப்பாகும்.

நெடுமணற் குவியலில் ஆங்காங்கே நாவல் மரங்கள் உண்டு. மணல் குவியல், நாவல் மரத்தின் மெல்லிய அடியைத் தடவிக் கிடக்கும் ஒருபொழுது; அதன் நடுப்பகுதியை அணைத்துக் கிடக்கும் ஒருபொழுது; அதன் உச்சிப் பகுதியைத் தழுவிக் கிடக்கும் ஒரு பொழுது. ஆனால் அலையோ, காற்றோ நாவலின் வேரைப் பறித்து வீழ்த்தியது இல்லை. உரிமை அன்பால் நீலநீரும், பொன் மணலும், கருநாவலும் உறவாடி வாழ்ந்தன. மோதலுக்கு இடையே அமைந்த முரியாத காதல் வாழ்வு இவற்றின் வாழ்வு.

நாவல் இயற்கைத் தாக்குதலைத் தாங்கி, அதன் உதவுதலை வாங்கி, உரிய பருவம் தவறாமல் கனிந்து குலுங்கும் அக்கனி முதிர முதிரக் கருமை விஞ்சும்; பஞ்சுபோல் மெத்தென இருக்கும். அதனைக் 'கருங்கனி' என்றும் 'இருங்கனி' என்றும் இயம்புவர். கருமையும் இருமையும் ஒருமைப் பொருளே தரும். கரும் பொன் னும் இரும் பொன்னும் 'இரும்பு' தானே! அதுபோல்.

கரிய நாவற்கனி பொன்மணல்மேல் பரவிக் கிடக்கும் காட்சி கவர்ச்சி மிக்கது. அது பொற்றகட்டில் மணி பதித்து வைத்தால் போல விளங்கியது. நன்றாகப் பழுத்துக் கருநிறங் கப்பிக்கொண்ட அக்கனி 'கருவண்டோ' என்று தோன்றியது. மாந்தரையோ மற்றைப் பறவை விலங்குகளையோ நாவற்கனி கருவண்டு என்று எண்ணுமாறு மயக்கவில்லை. மயக்கினால் வியப்பும் இல்லை. ஆனால், ஒரு கருவண்டையே, தான் கருவண்டு என்று மயக்கி உறவு கொண்டு உவப்புற வருமாறு செய்தது. ஔவையாரை மயக்கிய தாகக் கதையமைந்த கருநாவற்கனி இதனைச் செய்யாதா?

கருவண்டு மயங்கிக் கருநாவல்மேல் சென்றது. உணர்ச்சித் திறமிக்க வண்டு மயங்கினலும், உணவு வேட்கையுடைய ஒரு நண்டு மயங்கவில்லை. நாவற்கனி என்று கருதி அதனைத் தின்னு தற்குத் தன் பல்கால்களை நகர்த்தி நடையிட்டது. கனியைப்பற்றிக் கொண்டு இழுக்கவும் தொடங்கியது.

ஒரு போர் தொடங்கியது. போர்ப் பொருளாக இருப்பது நாவற்கனி. போரிடுபவை வண்டும், நண்டும்! ஒன்று, தன் இனத் தொடு உறவாட, அதனைத் தாக்க வரும் பகையினிடமிருந்து காக்கப்-போராடும் போராட்டம்; மற்ருென்று, தன் பசி விரைந்து செலுத்த, பசிப் பொருளை எடுக்கவிடாது தடுக்கும் பகையை அழிக்கப்-போராடும் போராட்டம்! சுருங்கச் சொன்னல் உணர்வுப் போராட்டம் ஒருபால்; உணவுப் போராட்டம் ஒருபால்.

போர் என்பது என்ன? ஒப்புடையவற்றுள் உண்டாக்கும் தாக்குதலே போர், 'பொரு' என்பதும் போர் என்பதும் ஒன்றே. 'பொரு' என்பதன் பொருள் ஒப்பு. ஆதலால் 'போல, ஒப்ப' என உவமை உருபுகளை அடுக்கும் இலக்கண நூல்கள், 'பொருவ' என்னும் உவமை உருபையும் சேர்த்தன. ஒப்பான இரண்டு போரிடுவதே போர். இங்கோ, ஒன்று விண்ணில் பறந்து திரியும் வண்டு; மற்ருென்று, மண்ணில் உலாவித் திரியும் நண்டு! வண் டுக்குப் பறந்து தப்பும் வாய்ப்பு உண்டு; நண்டுக்கு ஓடி ஒளிந்து கொள்ளும் வாய்ப்பு உண்டு; வண்டும் நண்டும் காலால் கிழிக்கவும் வாயால் கடிக்கவும் கூடியவை எனினும், உருவ அமைப்பில் சிறுமை பருமை வேறுபாடுடையன! இவற்றின் போரை அறப்போர் என்பது தகுமா? போர் நோக்கத்திலே வேற்றுமை; போர் உணர் விலே வேற்றுமை; போர்த் திறத்திலும், உடலமைப்பிலும் வேற் றுமை. இவ்வளவு வேற்றுமை யுடையவை தாக்குதல் 'போர்' அன்று! அறமும் அன்று.

வண்டு கனியை எடுக்க முனைகிறது; நண்டு அதனை இழுக்க முற்படுகிறது. வண்டு மெலியது; நண்டு வலியது; வலியது வெல் லும்' மெலியது தோற்கும்; இயற்கை நியதி இது!

''வலியார்முன் தன்னை நினைக்க; தான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து''

என்பதைப் பகுத்தறிவாளரே காற்றில் தூற்றிப் பறக்கவிடும்போது நண்டுக்குத்தான நல்லுணர்வு வரும்?

நண்டு வலிமையால் கவர்ந்து கொள்ளப் போகிறது; வண்டு தன் ஆற்றலெல்லாம் கூட்டிப் பற்றி இழுக்கிறது; இரைகின்றது; ஆர்க்கின்றது; அரற்றுகின்றது. அதன் ஆர்த்தலும் அரற்றலும்

வன்மையானவையோ? யாழை மீட்டும் கலைத்திறம் அறியா ஒருவன் மீட்டினுல், அவ் யாழிசை எப்படி இருக்கும்! அப்படி இசைத்தது! நண்டு அஞ்சுமோ? நயத்தக்க உணர்வு கொண்டு 'நன்று அன்று' என்று விட்டு விடுமோ? அம் மென்மையைப் பயன் படுத்திக் கொண்டு வன்மையால் வெற்றி பெறவே முனைந்தது. இவ் வறக்கேட்டை ஒழித்தாக வேண்டும் அல்லவோ?

ஒரு நாரை பறந்து வருகின்றது. இரை ஏதேனும் கிட்டுமோ என்னும் ஏக்கத்துடன் பறந்துவரும் நாரை அது. பசித் துயர் வெருட்டப் பறந்து வரும் நாரையின் பார்வை, வண்டும் நண்டும் போரிடும் காட்சியில் குத்திட்டு நிற்கிறது. அவ்வளவுதான்! நாரையைக் கண்ட நண்டு அச்சத்தால் கனியை விடுத்துத் தன் வளைக்குள் ஓடி மறைகிறது. வண்டும் பறந்து செல்கிறது. போரும் ஒழிந்தது; புலம்பலும் ஒழிந்தது.

போரிலா உலகம் உண்டோ? எங்கும் எந் நாளும் போர் நிகழ்ந்து கொண்டே உள்ளது. போரை ஒழிக்கவும் போரிடவே வேண்டியுள்ளது. போர் எவ் வகையால், எக் கரணியத்தால் எழுந் தால் என்ன? அழிவு-அழிவு-அழிவே! அழிவின்றிப் போரைக் காக்க விரும்பினர் புலவர் அம்மூவனுர். 'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்' என்பார்களே! அப் பசி வந்த நாரை வழியே அழிவிலாப் போரை ஆக்கிப் படைத்தார் அவர். நாரை போரிடாமலே போரை ஒழிக்கின்றது. அதன் நிழல் கண்டபோதே, போர்தானே ஒடுங்கு கின்றது. வண்டு நண்டு நாரை-என்பவை நாம் அறியாதவையா? அவற்றைக் கொண்டு போரிலா அமைதி உலகைப் படைத்துக் காட்டினர் அம்மூவர்! அவர் தீட்டிய இயற்கை ஓவியம் நற்றிணை யில் 35ஆம் பாடலாக மின்னுகின்றது.

"பொங்குதிரை பொருத வார்மணல் அடைகரைப்
புன்கால். நாவல் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி பழஞ்செத்துப்
பல்கால் அலவன் கொண்டகோட் கூர்ந்து
கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்
இரைதேர் நாரை எய்தி விடுக்கும்."

அருங்குறிப்பு: திரை - அலை; வார்மணல் - பெருகிய மணல்; புன் கால் - மெல்லிய அடி; கிளைசெத்து - கிளை (வண்டு) என்று கருதி; பழஞ்செத்து - பழமென்று கருதி; அலவன் - நண்டு; கோள் - கோள் ளுதல்; கொள்ளா - இசைத் திறம் அமையா; இமிரும் - ஒலிக்கும்; பூசல் - போர்; தேர் - ஆராயும்.

———

அகநானூற்றில் 'பவத்திரி'

[பி. எல். சாமி, ஐ. ஏ. எஸ்.]

சங்க இலக்கியத்தில் ஒரே ஒரு பாட்டில் 'பவத்திரி' என்ற ஊர்ப்பெயர் வருகின்றது. அகநானூற்றில் 340ஆம் பாட்டில் 'பவத்திரி' என்ற பெயர் வருகின்றது. அதுபோன்று மருங்கூர்பட்டினம், கோடிக்கரை போன்ற துறைமுகப்பட்டினங்களும் சங்க இலக்கியத்தில் ஒரே ஒரு பாடலில் கூறப்பட்டுள்ளன. தொன்முது கோடி என்று அழைக்கப்படும் கோடிக்கரையில் இராமன் தங்கி இலங்கைக்குச் செல்வதற்கு மந்திர ஆலோசனை செய்தான் என்று அகநானூற்றின் பழைய உரை கூறியுள்ளது. கோடிக்கரையைப் பற்றி அகநானூற்றில் (70) காணப்பட்ட செய்தியை முன்னரே செல்வியிதழில் விளக்கியுள்ளேன். கோடிக்கரையிலிருந்து இராமன் கடலைக் கடந்து இலங்கைக்குச் சென்றான் என்றதே பண்டைத் தமிழ் மரபுச் செய்தியாகும். ஆனால், கம்பன் காலத்தில் சேதுக் கரையிலிருந்து கடலைக் கடந்ததாகக் கூறியது பிற்காலத்திய புராணச் செய்தியாகும். வால்மீகி எழுதின இராமாயண நிகழ்ச்சி தமிழ் நாட்டிலோ, இன்றைய இலங்கை நாட்டிலோ நிகழவே இல்லை என்பதற்குப் போதிய புதிய, அண்மையில் கண்டுபிடித்த வரலாற்றுச் சான்றுகள் ஆதரவாக உள்ளன. அதைப் பற்றிப் பின்னர் ஒரு கட்டுரையில் விளக்குவேன். ஆயினும் அகநானூற்றில் கூறப்பட்ட மரபு வழிச் செய்தியைச் செவிவழிச் செய்தியைத் தமிழ் நாட்டிலிருந்து கி. பி. முதல் இரண்டாம் நூற்றாண்டில் தமிழருடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பால், கிரேக்கரும், உரோமரும் கூறியிருப்பதைக் காணும்போது சங்கப் புலவர்கள் கூறிய செய்திகள் எந்த அளவு உண்மைகளின் அடிப்படையானவை (Authentic) என்பதைக் கண்டுகொள்ள முடிகின்றது. கோடிக் கரையை 'நிகம' (Nigma) என்று பெரிப்புளூஸ் என்ற கிரேக்க நூலாசிரியன் கி. பி. முதல் நூற்றாண்டில் குறிப்பிட்டுள்ளான். நிகமம் என்பது வேதத்தைப் பின்பற்றிய மரபாகும். ஆகமம் என்பது வேதத்திற்கு வேறுபட்டதாகும் என்று பிற்காலத்தில் கருதினர். ஆதலின் சங்க காலத்தில் வேத வழக்கு புகுந்த ஊர் கோடிக்கரை என்பது தெரிகின்றது. அதற்கு அடுத்து 'டாலமி' (ptolemy) எழுதிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்குரிய நில வமைப்பு (Geography) நூலிலும் இந்தப் பெயர் கூறப்பட்டுள்ளது. 'நிகம' என்று கிரேக்க நூலாசிரியன் கூறும் ஊர்ப்பெயர் சங்க நூல்களில் 'நியமம்' என்று வரும் பெயராகும். 'நொச்சி நியமங்

கிழார்' என்ற புலவர் பெயர் சங்க இலக்கியத்தில் வழங்கியுள்ளது. 'நொச்சிநியமம்' என்ற கடற்கரைப் பட்டினம் எதுவென்று இன்று கண்டுகொள்ள முடியவில்லை.

ஆனால் சங்க காலத்தில் கோடிக்கரைக்குத் தமிழ்ப் பெயரும், பாலி மொழிப் பெயரும், வடமொழிப் பெயரும் ஒருங்கே வழங்கி யிருக்க வேண்டும். கோடிக்கரையைபபற்றி வழங்கும் பிற்காலத் திய செவிவழிச் செய்திகளில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இங்கு 'நிகமவனம்' என்று ஒன்று இருந்ததாகவும் வேதங்கள் சீர் குலைந்ததால் அவை கோடிக்கரைக்கு வந்ததாகவும் கோடிக்கரைக் காட்டில் வேதங்கள் தவமிருந்ததாகவும் அதனுல் கோடிக்கரையில் வேதங்கள் தழைத்ததாகவும் சித்தவைத்தியப் பரம்பரைச் செய்தி கள் கூறுகின்றன. இதன் காரணமாகவே பிற்காலத்தில் மறைக் காடு என்றும் வேதாரண்யம் என்றும் இந்த ஊர்க்குப் பெயர் வந்த தாகக் கூறுவர். பிற்காலத்தில் இப்போதைய வேதாரண்யமும் கோடிக்கரையும் தனி ஊர்களாகக் காணப்படினும் சங்க காலத்தில் கோடிக்கரைக் காடே 'நிகம' என்று கிரேக்க நூலாசிரியர்களால் குறிக்கப்பட்டது. அந்தக் காடு இன்றுள்ள வேதாரண்யம்வரை பரவியிருந்திருக்க வேண்டும். கோடிக்கரையைக் கோடிவனம் என்று கூறும் வழக்கமும் உண்டு. கிராமத்துப் பெண்கள் கோடி வனம் என்று கூறும் வழக்கமும் உண்டு. கிராமத்துப் பெண்கள் கோடிவனம் என்ற பெயரை இன்றும் சூடிக் கொள்கின்றூர்கள். இங்கு நவகோடி சித்தர்கள் வாழ்ந்ததாகவும் கடற்கரையில் நவ கோடி சித்தர் ஆசிரமம் இருந்ததாகவும் பிற்காலச் சித்தர்வழி பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன. இந்த நவகோடி சித்தர்கள் கடவுள் நம்பிக்கை அற்றவர்களின் கண்களில் கடவுள் புலப்பட மாட்டார் என்று கூறுவர். சித்தவைத்தியத்தில் சுத்தமார்க்கத்தின் அகத்தியரே தலைவர் என்று கூறுவர். இந்த அகத்தியர் நவகோடி சித்த ஆசிரமத்தின் அருகில் இருந்து நிகமவனத்தில் நிகழ்ந்த வேதச் செய்திகளையும் நவகோடி சித்த ஆசிரமத்தையும் கவனித்து வந்தார் என்று கூறுவர். கோடிக்கரையைப் பற்றி, சங்க கால மரபுச் செய்திகள் இன்றுவரை கூறப்படுவது வியப்பானதாகும். கிரேக்கர்கள் கோடிக்கரையைப் பற்றிய சங்ககாலச் செய்திக்குச் சான்று புகன்றுள்ளனர். நவகோடி சித்தர்கள் வாழ்ந்த ஆசிரமம் வெள்ளை நிற ஆலமரத்தின் அடியில் இருந்ததாகக் கூறப்படும் பரம்பரைச் செய்தி சங்க நூலான அகநானூற்றுப்பாடல் செய்தி யையே மாற்றிக் கூறினதாகும்.

> "கானலம் பெருந்துறைக் கழனி மாநீர்ப்
> பாசடைக் கலித்த கணைக்கால் நெய்தல்

விழவணி மகளிர் தழையணிக் கூட்டும்
வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவ மிரங்கு முன்றுறை
வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீ ழாலம் போல
ஒலிய விந் தன்றிவ் வழுங்க லூரே'' —அகம்-70

திறல்மிகு வீரனன இராமன் ஆலமரத்தின் அடியில் மந்திர ஆலோசனை செய்தான். அப்போது இரைச்சலிட்ட பறவைகளைத் தன் திறலால் அடக்கினுன். வீரனைத் திறலுடையவனுகக் கூறுவது பண்டைய வழக்காகும். புதுவைக்கருகில் உள்ள கிளியனூரில் உள்ள கோயில் கல்வெட்டில் 'திகைத்திறலார்' என்ற வீரனின் பெயர் கூறப்பட்டுள்ளது. போர்க் களத்தில் திகைப்பையூட்டும் திறனுடைய ஒருவனைப்பற்றி இந்தக் கல்வெட்டு கூறியுள்ளது. சங்க இலக்கியமும் இராமனைத் திறலான் என்று கூறியதே தவிர இராமனைக் கடவுளாகக் கூறவில்லை. சங்க காலத்தில் இராமன் பெரும் திறல்மிக்க மானுடனே என்று கருதப்பட்டான் என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆலமரத்தின் அடியில் மந்திர ஆலோசனை செய்த இராமனைப்பற்றி அகநானூறு கூறும் செய்தியைப் பின்பற்றியே பிற்காலத்தில் நவகோடி சித்தர்கள் வெள்ளை நிற ஆலமரத்தின்கண் ஆசிரமத்தை அமைத்து நடத்தினுர்கள் என்று செவிவழிச் செய்தி வந்தது. ஆதலின் சங்க இலக்கியச் செய்தி கி.பி. முதல், இரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த கிரேக்க ஆசிரியர்களிடம் பரவினதோடு மிகப் பிற்காலத்திய தமிழனுடைய பரம்பரைக் கதைகளிலும் வழங்கியுள்ளதைக் கவனிக்கவேண்டும். ஆதலின் செவிவழிச் செய்திகளையும் பரம்பரைச் செய்திகளையும் பகுத்தறிவோடு ஆராய்ந்தால் உண்மைகள் பல புலப்படும் என்பதை அறியவேண்டும். அகநானூற்றில் கூறப்பட்ட ஆலமரத்தைப் பிற்காலச் சித்தர்கள் தங்களுடைய ஆசிரமத்தின்கண் இருந்த ஆலமரமாக மாற்றினர்.

செவி வழிச்செய்திகளை எல்லாம் பொய்யென்றும் புராணம் என்றும் ஒதுக்குவது தவறு. ஆனல் பகுத்தறிவோடு அவற்றை ஆராய்ந்து எவை உண்மை, எவை பொய் என்று காண்பதற்கு நுண்ணிய ஆராய்ச்சி அறிவு வேண்டும். எடுத்துக்காட்டாக, சங்க நூல்களில் 'பாரத்து நன்னனை'ப் பற்றிய பாடல்கள் உள்ளன. இந்த 'பாரம்' என்ற ஊரை வடமலையாளத்தில் நேரிலே நான் நடந்து காணச்சென்றேன். நன்னனின் எழில் மலையை ஆராய்ந்தேன். பாரத்தை அடைவதற்குச் சிறியதொரு சாலைகூட இல்லை. ஆயினும், நான் சென்று ஆராய்ந்தபோது நன்னன்

தோட்டத்து மாங்கனியைத் தின்ற சிறுமியின் கையை வெட்டிய கதையைப் பேசினதைக் கேட்டேன். அதுபோன்றே நன்னன் பதுக்கிவைத்த செல்வத்தைப் பற்றியும் பழமொழி இன்றும் வழங்கு கின்றது. பாரத்திற்கு அருகில் இருந்த 'உதுமா' என்ற ஊரையும் கண்டேன். 'உதிர்மா' என்ற ஊரே 'உதுமா' என்று மாறியதையும் உணர்ந்தேன். அந்த உதிர்ந்த மாங்கனியைத் தின்ற பெண் கொல்லப்பட்டாள் என்பதை அந்த மலையாள ஊர்ப் பெயர்ச் சான்று இன்றும் கூறுகின்றது. அங்த நன்னன் பரம்பு உள்ளது. வேறுசில மரபுச்செய்திகள் உள்ளன. ஆதலின் சங்க காலச் செய்திகள் பல உண்மையானவை, அவையே பிற் காலத்தில் செவிவழிச் செய்திகளாகவும், மரபுச் செய்திகளாகவும் மாறின என்பதைக் காண்கிறோம்.

சங்க நூல்களில் ஒரே ஒரு பாட்டில் கூறப்பட்டுள்ள 'பவத்திரி' போன்ற ஊர்ப்பெயர்கள் உள்ளன. சங்க நூல்களில் 'காண்ட வாயில்' என்ற பட்டினம் (நற்றிணை-38) கூறப்பட்டுள்ளது. அதுவே இன்று 'மாண்டவாயில்' என்று மரக்காணத்துக்கு அருகில் உள்ள பட்டினமாக வழங்குகின்றது. சேதுப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டதுபோல 'மயிலாடுதுறை' என்ற அழகான பெயர் 'மாய வரம்' என்று மாறி இன்றும் மாய்வதற்கு வரம் கேட்பதுபோல மாண்டுபோனவாயில் என்று இன்றும் வழங்குகின்றது. மரக் காணமே சிறுபாணாற்றுப்படையில் எயில் பட்டினமாகக் கூறப்பட் டதையும் இதையே கிரேக்கர்கள் 'சோபாட்மா' என்று கூறியதை யும் சிலப்பதிகாரத்தில் மதிள்சூழ்ந்த பட்டினத்தைச் 'சோபட்டினம் என்று கூறியதையும் மிகவும் கவனிக்க வேண்டும். வாயில் என்ற பெயர் சங்க காலத்தில் வணிகத்துறையில் சிறந்த கடற்கரைப்பட்டினத்திற்கு இடப் பட்டதாகும். இந்த வாயில்வழியாக ஏற்றுமதி, இறக்குமதி, நடந் தது. வாயில் என்பது கதவு என்ற பொருளைக்கொண்டது. ஆதலின் 'அலைவாய்' என்ற பாண்டியனின் கடற்கரைத் தலைநகரை மொழிபெயர்த்துப் 'பாண்டியகவாட' என்று வால்மீகி வடமொழியில் கூறினன். 'அட்டவாயில்' என்ற ஊர் அகநானூற் றில் கூறப்பட்டுள்ளது. 'அட்டவாயில்' என்ற ஊர் எதுவென்று தெரியவில்லை. ஆனால், சோபட்டினமான, எயில்பட்டினமான மரக்காணம் கிரேக்கர்களால் கூறப்பட்டிருப்பினும் புதுவைக்கருகில் இருந்த அரிக்கமேடு சங்க நூல்களில் கூறப்படாதது புதிராக உள் ளது. ஆயினும்' சங்கப் பாடல்கள் வரலாற்றைக்கூறும் நோக்கின அல்ல என்பதைக் காணும்போது வரலாற்றுச் செய்திகளைக் கூரு ததைப் புரிந்து கொள்ளமுடியும். வரலாற்றுச் செய்திகளையும் பட்டினங்களையும் ஊர்களையும் சங்க நூல்களில் கூறியிருப்பது

பாட்டின் தொடர்பான செய்திகளாகவே காணப்படுகின்றன. பாட்டின் அடிப்படைச் செய்திகளாகக் கூறப்படவில்லை. ஆதலின் சில வரலாற்றுச் சிறப்புடைய நகரங்களையும் பட்டினங்களையும் சங்க நூல்களில் புலவர்கள் கூறவில்லை என்று தெரிகின்றது. அதனுல்தான் சங்க காலத்திலேயே சிறப்புமிக்க உரோமர் வாழ்ந்த பட்டினமான அரிக்கமேடு சங்க இலக்கியத்தில் குறிப்பிடப் படவில்லை. ஆனுல், கோடிக்கரை, காண்டவாயில் போன்ற பட்டினங்கள் ஒரே ஒரு பாட்டில் குறிப்பிடப்பட்டதையும் காண்கிறோம்.

'பவத்திரி' என்ற பட்டினம் சங்க காலத்தில் செழிப்புடன், சிறப்புடன் இருந்ததை அகநானூற்றுப்பாடல் (340) கூறியுள்ளது.

> "செல்லா நல்லிசைப் பொலம்பூட் டிரையன்
> பல்பூங் கானற் பவத்திரி யனவிவன்
> நல்லெழி லினநலந் தொலைய வொல்லெனக்
> கழியே யோத மல்கின்று வழியே" —அகம் 340 (6-9)

அறிஞர் சீனி வேங்கடசாமி அவர்கள் சங்ககாலத்தில் தமிழ்நாடு தற்போதுள்ள ஆந்திர நாட்டில் உள்ள நெல்லூர்வரை இருந்திருக்கவேண்டும் என்று கூறினுர். சங்க இலக்கியத்தில் கூறப்படும் 'சாலியூர்' நெல்லூ ராகவே இருக்கலாம் என்று கருதுகின்றுர். சீனுவில் இருந்து வந்த சிறந்த பயணியான 'யுவான்சாங்கு' சிறப்புமிக்க சாலி அரிசியைப் பௌத்தப்பள்ளியில் அடியார்கள் உண்டதைக் கூறியுள்ளான். சிறந்தவகை நெல்லை விளைத்த ஊரே நெல்லூர் என்று கருதவேண்டியுள்ளது. இன்றும் 'மொலகுலுகுலு' என்ற நெல்லூர் அரிசி சிறப்புமிக்கதாகும். ஆதலின் நெல்லூரே சாலியூர் என்பதில் ஐயமில்லை. சால்புமிக்க அரிசியை, நெல்லை 'சாலி' என்று பண்டைத் தமிழன் கூறினுன். தெலுங்கு மொழியில் இன்றும் 'சாலு' என்ருல் போதுமானது என்ற பொருள் உள்ளது. ஆதலின் 'யுவான்சாங்கு' என்ற பயணி சிறந்தவகை அரிசியைச் 'சாலி' என்று குறிப்பிட்டுள்ளான் என்பதைக் காணும் போது அது திராவிட மொழிப் பெயர் என்பதில் ஐயமில்லை. சங்க இலக்கியத்தில் 'சால்' என்ற சொல் சிறப்புமிக்கது, பொருத்தமானது என்ற பொருள்களில் வழங்கியிருப்பதைக் காணலாம். ஆதலின் சங்க இலக்கியத்தில் கூறப்பட்ட 'சாலியூர்' நெல்லூராகவே இருக்கவேண்டும். நெல்லூர்வரை தொண்டைமண்டலம் பண்டைத் தமிழகம், சங்க காலத்திலேயே சிறப்புற்றிருக்கவேண்டும் என்று கருத இடமுள்ளது. பல்லவர் காலத்திலேயே காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆந்திரம் தழுவிய பல்லவநாடு பிற்காலத்தில் குறைந்ததாகத் தெரிகின்றது. ஆந்திர நாட்டின் கடற்கரை ஓரப்பகுதிகளை ஆண்ட தொண்டையர் நாட்டையே

சாதவாகனர்களுக்கு அடிமில் இருந்த குறுநில அரசர்களான பல்லவர்கள் கைப்பற்றினர் என்று தெரிகின்றது.

வரலாற்றுச் சான்றுகளைக்கொண்டு ஆராய்ந்தால் பல்லவர்கள் சாதவாகனப் பேரரசின் தலைவர்களாக இருந்து தொண்டை நாட்டை ஆண்ட தமிழ் மன்னர்களுடன் தொடர்புகொண்டு பல்லவப் பேரரசை நிறுவினுர்கள் என்று கருதவேண்டியுள்ளது. தொண்டையர்கள் சங்ககாலத்தில் ஆண்ட காஞ்சியுடன் தொடர்பு கொண்டு அவர்கள்வழி நாகநாடான ஈழ நாட்டுடன் உறவு கொண்டு 'பீலிவளை' என்ற நாகநாட்டரசியை மணந்து பல்லவ அரசை நிறுவினதை மணிமேகலையிலிருந்தும் கல்வெட்டுச் சான்று களிலிருந்தும் உய்த்துணர்ந்து அறியலாம். சாதவாகனருடன் தமிழ் மன்னர்களுக்கு நெருங்கிய தொடர்பு இருந்ததைச் சிலப் பதிகாரச் செய்திகள் காட்டுகின்றன. அதை எண்பித்துக் காட்டுவதுபோலக் கடலூர்வரை சாதவாகனர் வெளியிட்ட சங்க காலத்தை யொட்டிய பாலி, தமிழ் ஆகிய இரு மொழிக்காசுகளும் கிடைத்திருப்பதைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். ஆந்திர நாட்டினோடு இருந்த தொடர்பு பிற்காலத்திலும் இருந்ததற்கு ஆந்திரச் சோடர்கள் (சோழர்கள்) சான்று தருகின்றூர்கள். பிற் காலத்திலே இந்த சோட வம்சம் தோன்றினும் தங்களைப் பெருமை யாகக் கரிகாலன் மரபினராகக் கூறுவதைக் காணலாம்.

(தொடரும்)

புலவரைப் போற்றுதல்

''தமிழ்ப் புலமை நிறைந்த சான்றோரைத் தன்னிலும் மிக மேலாக நன்கு மதித்து அவரது சொல்வழி நடந்து, தனது மெய்ப்புகழை நிலை நிறுத்திய கோப்பெருஞ் சோழனை யொத்த தமிழ்வேந்தர் இஞ்ஞான்றிருந்தனராயின், இத் தமிழ்நாடுந் தமிழ்மொழியும் எத்துணை மேலான நிலையில் திகழ்ந்திருக்கும்! அந் நல்வினை இப் போதிவற்றிற்கில்லையே !''

—மறைமலையடிகள்

(முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர், பக். ௬௩)

செயற்கைக் கோள்கள்

[என். கே. வேலன், பி. ஏ]

நிலவு பூமியைச் சுற்றி வருவதுபோல் பூமியைச் சுற்றி வருவதற்கு இக்காலத்தில் செயற்கைக் கோள்களை அனுப்பு கின்றனர். இவற்றின் உள்ளே அறிவியல் ஆராய்ச்சிக்கு வேண்டிய கருவிகளை வைத்திருப்பார்கள். வானவெளியின் தட்பவெப்ப நிலை, 'காஸ்மிக்' கதிர்கள், ஞாயிற்றின் ஒளி, காற்றின் தன்மை, விண் கற்கள் ஆகியவற்றைப் பற்றிய செய்திகள் துணைக் கோள்களி லிருந்து வந்துகொண்டே இருக்கும்.

நிலவினைப் பூமியின் துணைக்கோள் என்று சொல்கிறோம். மற்ற கோள்களுக்கும் இயல்பாகவே துணைக்கோள்கள் உண்டு. செவ்வாய்க்கு இரண்டு துணைக்கோள்களும், வியாழனுக்குப் பன்னிரண்டு துணைக்கோள்களும், சனிக்கு ஒன்பது துணைக்கோள் களும் உள்ளன. நிலவு பூமியை எப்போதும் ஒரே அளவாகச் சுற்றி வருகின்றது. அது விலகிச் செல்லாமல் பூமி தன்னிடம் இழுத்துக் கொள்கின்றது. இவ்வாறே மற்ற கோள்களும் துணைக் கோள்களைக் கவர்ந்து இழுக்கின்றன. இக் கவர்ச்சியினால் துணைக் கோள்கள் பாதையை விட்டு விலகாமல் சுற்றி வருகின்றன.

மனிதன் ஆராய்ச்சித் திறமையினால் பூமியைச் சுற்றுவதற்குச் செயற்கைக் கோள்களைச் செய்து அனுப்புகிறான். இவற்றின் உதவியால் தொலைக்காட்சிப் படங்களை எல்லா இடங்களுக்கும் அனுப்பலாம். செயற்கைக் கோள்களை மேலே அனுப்புவதற்கு "ராக்கெட்" என்னும் ஏவுகணை பயன்படுகின்றது. நாம் திருவிழாக் காலங்களில் சிறிய வாணங்களைச் செய்து மேலே அனுப்புகிறோம். இவற்றைப் போலவே பெரிய ஏவுகணைகள் செய்து விண்கலங்களையும் செயற்கைக் கோள்களையும் மேலே செலுத்துவதற்குப் பயன்படுத்துகின்றனர். ஏவுகணையின் உள்ளே இருக்கும் எரிபொருள் தீக்குழம்புபோல் அடிப்புறத்தில் வரும். தீ கீழ்நோக்கி வேகமாக வருவதால் ஏவுகணை மேல் நோக்கித் தள்ளப் படுகின்றது.

நம் நாட்டு அறிஞர்கள் "ஆரியபட்டா" என்ற துணைக் கோளைச் செய்து வானவெளியில் அனுப்பினர். அது பூமியைச் சுற்றி வலம் வந்துகொண்டிருக்கின்றது. நமது நாட்டில் மிகப் பழைய காலத்தில் ஆரியபட்டர் என்னும் அறிஞர் வானநூல்

ஆராய்ச்சியில் தலை சிறந்து விளங்கினர். அவருடைய நினைவுக்கு அறிகுறியாக இத் துணைக்கோளுக்கு "ஆரியபட்டா" என்று பெயர் சூட்டியுள்ளனர்.

1957இல் உருசியர்கள் துணைக்கோளை வீசுவதில் முதன் முதலாக வெற்றி கண்டனர். பிறகு அமெரிக்கர்களும் ருசியர்களும் எத்தனையோ துணைக்கோள்களை வீசிப் பூமியை வட்டமிடச் செய்தனர். எவ்வளவு ஆற்றல் பொருந்திய தொலை நோக்கிகளில் பார்த்தாலும் விண்வெளியின் அற்புதங்கள் முழுவதையும் காண முடிவதில்லை. பூமியைச் சுற்றிலுமுள்ள காற்று மண்டிலம் அவற்றை மறைக்கின்றது. காற்று மண்டிலத்திற்கு மேலே சென்று பார்த்தால் உண்மையான வானுலகைக் காணலாம். பூமியைச் சுற்றி வரும் துணைக்கோள்கள் பல செய்திகளை நமக்கு அறிவிக்கின்றன. கதிர்வீச்சுக்கள், காந்தப்புலங்கள், மின்சாரப்புலங்கள் ஆகியவற்றைத் தெரிந்து கொள்கிறோம். வானிலையைப் பற்றியும் துணைக்கோள் அறிவிக்கின்றது.

செயற்கைக் கோளில் இருக்கும் மின் கருவிகள் செய்திகளையெல்லாம் கண்டுணர்ந்து நமக்குத் தெரிவிக்கின்றன. நமது நாட்டிலும் அணுசக்தி ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. நம்முடைய அறிஞர்களும் பூமியைச் சுற்றும் துணைக்கோள்கள் செய்து தமது திறமையைக் காட்டியுள்ளனர். இப்போது உலக நாடுகளுக்கிடையே போக்குவரத்துத் தொடர்புகள் இருப்பன போன்று எதிர்காலத்தில் கோள்களுக்கும் போக்குவரத்துத் தொடர்புகள் ஏற்படக் கூடும். கல்வியைப் பரப்புவதற்கும் துணைக்கோள் உதவுகின்றது.

நமது நாட்டின் இரண்டாவது துணைக்கோளுக்கு "பாஸ்கரா" என்ற பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது. 'பாஸ்கரன்' என்ற பெயருடைய வானநூல் ஆராய்ச்சியாளர்கள் இந்திய நாட்டில் இருவர் இருந்தனர். முதலாவது பாஸ்கரர் ஆறும் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இரண்டாம் பாஸ்கரர் கி. பி. 1114இல் இருந்தவர். அவர் கணித மேதையாக இருந்தார் எனக் கூறப்படுகின்றது. 1979 ஜூன் ஏழாம் நாள் 'பாஸ்கரா' என்ற துணைக்கோள் வான வெளியில் அனுப்பப்பட்டது.

இரண்டு துணைக்கோள்களையும் நம்முடைய இந்திய விஞ்ஞானிகளே செய்து முடித்தனர். அவற்றை வானவெளியில் அனுப்புவதற்கு உருசிய அறிஞர்கள் உதவியாக இருந்தனர். நமது நாட்டின் நிலவளம் நீர்வளம், கனிப்பொருள்கள் ஆகியவற்றைத் துணைக்கோள்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. அடர்ந்த

காடுகளையும், இமயத்தின் பனிக்கட்டிகளையும் அளந்து காட்டுகின்றன. விண்வெளி ஆராய்ச்சியில் இந்திய நாடு நல்ல முன்னேற்றம் அடைந்து வருகின்றது. மூன்ருவது துணைக்கோள் ஒன்றை 1980இல் செலுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

வானவெளி ஆராய்ச்சியினுல் உலகிற்குத் தீங்கு நேரிடும் எனச் சிலர் கூறுகின்றனர். புதிய கருவிகளை அழித்தல்தொழிலுக்குப் பயன்படுத்தாமல், ஆக்கல்தொழிலுக்குப் பயன்படுத்தினுல் நாட்டிற்கு நன்மை உண்டாகும். நாளும் கோளும் நம்மை ஒன்றும் செய்யமாட்டா.

''ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்லநல்லஅடியார் அவர்க்கு மிகவே''

எனத் தேவாரம் ஓதுகின்றது.

———

உயர்வு தாழ்வு கருதாது அறஞ்செய்க!

கல்வியிலும் நுண்ணறிவிலும் சிவநேய அடியரார் நேயங்களிலும் அருளொழுக்கத்திலும் சிறந்தார்க்கே உயர்வு கொடுக்க வேண்டுமேயல்லாமல், வெறும் பிறப்புப் பற்றி இவ்வியல்புகள் இல்லார்க்கு உயர்வு கொடுத்தல் ஆகாது. என்ருலும் எவரையும் பகையாமல் அவரவர்க்கு வேண்டுமுதவிசெய்து, எல்லாரோடும் அன்பினுல் அளவளாவுதல் வேண்டும். சத்திரஞ் சாவடிகளிலும் சிறப்பு நாள்களிலும், பிறப்பால் உயர்ந்தவரென்று சொல்லிக்கொள்ளும் ஒரு வகுப்பினர்க்கே உணவு கொடுத்தல் பொருள் கொடுத்தல் முதலிய அறங்களைக் குருட்டுத்துத்தனமாய்ச் செய்கிருர்கள். இதுவும் அறவே தொலைக்கப் படுதல்வேண்டும். உயர்வு தாழ்வு கருதாது அறஞ்செய்யத் தக்கார் எவரைக் காணினும் அவர்க்கு அறஞ்செய்தலே தக்கது.

—மறைமலையடிகள்

(மறைமலையடிகளார் அறிவுரைக் கோவை, பக். ௨௦௧-௨௦௨.)

தமிழின் தலைமையை நாட்டும் தனிச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

17. பாதம்

பள்—படு. படுதல்=தாழ்தல், விழுதல், பொருகளத்தில் விழுந்திறத்தல், இறத்தல். பட்டவன் குறி=நடுகல். பட்டவன் காணி=களத்திறந்தவனுக்கு விடப்பட்ட மானியம். படு=குளம், மடு.

படு—படி. படிதல்=தாழ்தல், பணிதல், பணிவிடை செய்தல்.

படி—பதி. பதிதல்=தாழ்தல், இறங்குதல், ஊன்றுதல், அகழ்தல், அழுந்துதல், உரமாகப் பதிதல், மணி பதித்தல், கற்பாவுதல், எழுதுதல்.

பதி=பதிகை, பதிக்கும் நாற்று, பதிந்திருக்கும் உறைவிடம், வீடு, கோயில், நகர்.

பதி—பதிவு. பதி—பதியம்.

பதி—பதம்=நிலத்திற் பதியும் பாதம், கால், ("எறிபதத்தா னிடங்காட்ட" புறநா. 4), உடம்பில் முழங்காலளவு போன்ற காற் பகுதி, பதிந்திருக்கும் இடம், பதவி, பாதச் சுவட்டால் ஏற்படும் பாதை வழி.

பதம்—பாதம்=நிலத்திற் பதியுங் காலடி. பாதத்தைக் கொண்ட கால். ("பாதக் காப்பினள் பைந்தொடி" சிலப். 14 : 23), விளக்குத் தண்டின் பரந்த அடிப்பகுதி, இருக்கை தாங்குங் கால், காற்பங்கு, செய்யுளடி. "வாங்கரும் பாத நான்கும் வகுத்த வான்மீகி" (கம்பரா. நாட்டுப். 1).

பாதக்காப்பு, பாதக்குறடு, பாதகடகம், பாதகாணிக்கை, பாதச்சாயை, பாதசக்கரம், பாதசரம், பாதசாயலம், பாத தாமரை, பாததூளி, பாதப்படி, பாதபூசை முதலியன பாதத் தொடர்பான கூட்டுச் சொற்கள். இவை புணர்ச்சியில் வலி மிக்கும் மிகாதும் வழங்கும்.

பாதம்—பாதை=பாதம் படுவதனால் ஏற்படும் வழி.

வடசொற்கள் (வேதமொழியும் சமற்கிருதமும்)

pat, to fall down, fall or sink.

patha, way, path, road, course.

Daksiṇa patha, Southern Way, Deccan.

pathaka, knowing the way, a guide.

pathat, going, travelling, a road.

pathika, knowing the way, going on a road, a traveller, wayfarer, a guide.

pathikāya, to act as a traveller.

pathila, a traveller.

pathya, belonging to the way, suitable, fit, proper, wholesome, salutary, esp. said of diet in a medical sense.

*pad*², to fall, RV.

*pad*³, foot.

pada, foot, step, pace, stride, trace, vestige, mark, RV.

padāji, foot-soldier.

padatika, a foot man.

padika, going on foot, pedestrian.

pād, a strong base of *pad*³.

pāda, foot, RV.

1. *pādaka*, a small foot, RV.
   pādapa, drinking at foot, tree.

2. *pādaka*, a foot stool or cushion for the feet.

pādaya, to stretch out at the feet.

pādavika, a traveller.

padāt, a foot soldier. *padāta*, infantry.

pādika, lasting for a quarter of the time.

pādin, footed, having feet, having pādas, as a stanza.

pādukā, a shoe, slipper, *pādutin*, having shoes, shoed.

pādū, a shoe or slipper.

pādya, relating to or belonging to the feet.

ஆங்கில இலத்தீன் கிரேக்கச் சொற்கள்

E. *antipodes*, n. pl. places diametrically opposite to each other, esp. region opposite to our own, f. LL. f. Gk. *antipodes*, having the feet opposite, *anti*, against, *podos*, foot.

ஞாலவுருட்சியினால், நாமும் அமெரிக்கரும், ஒரு வகுப்பாரை நோக்கி ஒரு வகுப்பார் கால் நீட்டிக் கொண்டிருத்தல்போல் தோன்றுவதை, நோக்குக.

E. *biped*, two-footed animal, f. L. *bipedis*, *bi*, two *pedis*, foot.

E. *cephalopod*, mollusc with distinct tentacled head, f. L. *cephalo* f. Gk. *kephalikos* f. *kephale*, head, *podos*, foot.

E. *cirriped*, marine animal in valved shall attached to other bodies, with legs like curl of hair., f. F. *cirri* f. L. *cirrus*, curl *pedis*, foot.

E. *decapod*, ten-footed crustacean, f. F. *decapode*, f. Gk. *deca*, ten, *podos*, foot.

E. *foot*, termination of leg beginning at ankle, f. 'OE., OS.' *fōt*, OHG. *fuoz*, ON. *fotr*, Goth. *fōtus*.

பாதை என்னும் சொல் ஆங்கிலத்தில் path என்று பகர முதற் சொல்லாகவே யிருத்தலால், பாதையை யுண்டு பண்ணும் பாதத்தின் பெயரும், கிரேக்கத்திலும் இலத்தீனிலும்போல் முதற்கண் பகரமுதற் சொல்லாகவே யிருந்து, பின்னர் வல்வகர (f.) முதற் சொல்லாக வலித்துத் திரிந்திருத்தல் வேண்டும்.

E. *millepede*, *millipede*, kinds of myriapods, with numerous legs usu. on each segment in double pairs., f. L. *millepeda*, *mille*, thousand, *pedis*, foot.

ஆயிரங் காற்பூச்சி.

E. *myriapod*, animal with many legs, of the class comprising centipedis and millepedes, f. Gk. *murias*, f. *murioi* 10,000, *podos*, foot.

E. *pad*[1], v. t. & i. to tramp along road on foot, travel on foot., f. LG. *padden*, *pidden*, to tread.

E. *pad*[2], road, f. Du., LG. *pad*, path.

E. *pedal*, each of the wooden keys played upon by the feet, foot lever for drawing out stops in organ, foot lever in various machines, esp. bicycle, f. F. *pedale*, f. It. *pedale*, f. L. *pedalis*, f. *pedis*, foot.

E. *pedate*, a. footed, f. L. *pedalus*.

E. *pedestal*, base supporting column or pillar, base of statue etc., f. F. *piedestal*, f. It. *piedestallo* (*pie*, foot, f. L. *pes*, *pedis*+*di*, of+*stallo*, stall).

E. *pedestrian*, going on foot, one who walks. f. F. *pedestre*, or L. *pedester*.

E. *pedicel*, *pedicle*, small stalk-like structure in plant or animal, f. mod. L. *pedicellus* dim. of L. *pedienlus* dim of *pedis*, foot, *cule*, *culus*, dim. suf.

E. *pedicure*, n, chiropody; v. t. to cure or treat feet by removing corns etc., f. F. pedicure f. L. *pedis*, foot+*cura*, care.

E. *pedigree*, geneological table., f. AF.=OF. *pic de grue*, crane's foot, mark denoting succession in pedigrees.

E. *pedometer*, instrument for estimating distance travelled on foot by recording number of steps taken., f. F. *pedometre*, f. L. *pedis*, foot+O+meter.

E. *pedrail*, device for facilitating progress of heavy vehicles over rough ground by attachment of broad foot-like supporting surfaces to wheel-rims., f. L. *pedis*, foot+rail.

E. *peduncle*, stalk of flower, fruit or cluster, stalklike process in animal body, f. mod. L. *pedunculus*, f. L. *pedis*, foot+uncle.

E. *podagra*, gout, esp. in feet, f. L. f. Gk. *podos*, foot, *agra*, catching.

E. *podium*, continuous projecting base or pedestal, raised platform around arena of amphi theatre, continuous bench round room., f. L f. Gk. *podion* (*podos*, foot).

E. *podophyllin*, yellow bitter resin of cathartic properties got from root of wild mandrake, f. L. *podophyllum*, f. Gk. *podos*, foot, *phullon*, leaf.

Gk. *podos—pous*, foot; L. *pedis—pes*, foot., AF., OF. *pie*, foot.

E. *path*, foot way, esp. one merely beaten by feet, not specially constructed; track laid for foot or cycle racing; line along which person or thing moves. OE. *paeth*, OLG. *pad*, OHG. *pfad*, WG. patha.

இச் சொல் பாதை என்னும் தமிழ்ச் சொல்லே வடிவிலும் பொருளிலும் பொருட்காரணத்திலும் ஒத்திருப்பதும், வடமொழியி லின்மையும், கவனிக்கத்தக்கன.

E. *quadruped*, four-footed animal., f. F. *quadrapede* f. L. *quadrupedis*, *quadri*, four, *pedis*, foot.

E. *tripod*, stool, table, utensil, resting on three feet or legs. L. and Gk. *tri*, three, Gk. *podos*, foot.

E. *tripos*, n. (Camb. univ.). (List of successful candidates in) honours examination. [as *tripod*. with ref, to stool on which B. A. sat to deliver satirical speech at commencement., f. Gk. *tri*, three, *podos*, foot.

கடைக் கழகச் செய்யுட்களில், பாதம் என்னும் சொல் வர வேண்டிய இடத்தில் அடி (அல்லது தாள்) என்னுஞ் சொல்லே வந்திருத்தலால், சிலர் பாதம் என்னுஞ் சொல் வடசொல்லோ என ஐயுறக் கூடும். தொல்காப்பியமும் பதினெண்மேற்கணக்கும் திருக்குறளும் நூலும் பனுவலும் தனிப்பாடற்றிரட்டுமே யன்றி, அகர முதலிகளல்ல. ஆரியர் வருகைக்கு முற்பட்ட எழு நிலச் செய்யுள் இலக்கியமனைத்தும் அழிக்கப்பட்டுவிட்டது. சில பொருள்கட்கு, உலக வழக்குச் சொல்லும் இலக்கிய வழக்குச் சொல்லும் தொன்றுதொட்டு வேறுபட்டே வந்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக, காடை என்னும் உலக வழக்குச் சொல்லிற்குத் தலைமாருகக் குறும்பூழ் என்னுஞ் சொல்லே கழகச் செய்யுட்களில் வழங்கியிருத்தல் காண்க.

பாதம் என்பது, நிலத்திற் பதிதற் கேற்றவாறு அகன்று தட்டையா யிருத்தல்வேண்டும். பாதம் வைத்த விளக்கு என்னும் வழக்கை நோக்குக. அடி என்பது, அடிப்பகுதி, அடியுறுப்பு, அடிப் பக்கம் என்னும் மூவகைப் பொருளை, எல்லாப் பொருளொடும் பொருந்தப் பொதுப்படக் குறிப்பதால், பாதம் என்னுஞ் சொல்லை ஒத்ததன்று. பெட்டிக்கு அடியில் என்பதைப் பெட்டியின் அல்லது பெட்டிக்குப் பாதத்தில் என்று சொல்லும் வழக்கின்மை காண்க.

பாதம் என்னும் சொல்லிற்கு மூலமான பதி என்னும் வேர்ச் சொல்லையும் அதன் தோற்ற வரலாற்றையும் வேறெம்மொழியிலும் காணமுடியாது. மக்கள் குமரி நாட்டினின்று வடக்கும் கிழக்கும் மேற்கும் சென்றவராதலால், தமிழின் தொன்மை முன்மை தாய்மை தலைமையை உணர்தல் வேண்டும்.

வரலாறும் மொழிநூலும், இவ்வுண்மையைக் கோபுரவுச்சி யினின்று குமுறிச் சாற்றுகின்றன. எவ்வகை யெதிர்ப்பும் இன்னும் ஈராண்டிற்குள் இம்மியும் இல்லாதுபோம்.

———

திருமலைக்குமரன் திருவருள் மாண்பு

[தவத்திரு முருகதாச அடிகள்]

திருமலையென்பது, பாண்டி நாட்டில் உள்ள மலைக் கோயில்களில் ஒன்று. பண்மொழி என்ற பகுதியையடுத்துள்ள முருகன் திருக்கோயில். திருநெல்வேலியில் வாழ்ந்த வண்ணச்சரபம்-அருட்டிரு-தண்டபாணியடிகள் இளவயது முதற்கொண்டே, வேல்வழிபாடு, ஆறெழுத்துச்செபம், திருவுருவநாட்டமென்ற தியானம் இம் மூன்றிலும் ஈடுபாடு மிக்கவராய் விளங்கினர். மனம், மொழி, மெய், என்ற மூன்றின் வாயிலாக முருகப்பெருமானை மனக்கண்முன் பலகாற் கண்டனராயினும் முகக்கண்முன் காண வேண்டும் என்ற பேரவாமிகுந்தனர் - வேண்டினர். இப்படிப் பல நாள்களாயின.

ஒருநாள் இவ்வெண்ணம் மேலெழுந்தது. மேலே கூறிய திருமலைக்குமரக் கடவுள் முன்சென்று வேண்டுதல் செய்வேன்; கண்முன்காட்சி தராவிடின் அம் மலையினின்றும் உருண்டு உயிர் விடுவேன் என்ற உணர்வு காரணமாகத் திருநெல்வேலியிலிருந்து திருமலை செல்லலானர். அடிகள் தம் பாடல்கள் அமைந்த ஏட்டுப் புத்தகங்களைத் திருவுருமாமலையென்ற குறுக்குத்துறை முருகன் கோயிலில் வைத்துப் போயினர். அப்படிச் செல்லும் இடைவழியில் சரவணதாசரென்று அடிகளாற் கூறப்பெற்ற அருணசலத்தொண்டமான் என்பவர் அடிகளுடன் தொடரலானர். அக்கால் அவரிடம் 'நான் இவ்விதமான கருத்துடன் செல்கின்றேன்; எனவே இது சமயம் வரவேண்டாம். செல்க' என்றனர். அதைக் கேட்ட தொண்டமான் :

"வடிவேலான், அந்தமலைமேற் சேவை அருளாமல் உனைக் கொன்ருல் என்றனது மேனியையும் சிதைப்பேன் என்றுடன் போந்தான்" என்பது அடிகள் கூறுவதால் அறியலாம். எனவே காட்சிதந்தால் தானும் கண்டுகொள்ளலாமே என்பது தொண்டமானது விருப்பம். சரியென்று சென்ருர்கள். இரண்டு நாட்கள் மலைமீதே தங்கினர். கனவிலும்கூடக் காட்சி தரவில்லை. உயிர் விட வேண்டாமென்று கூறிஞருமில்லை - மனம் வருந்திஞர் அடிகள்.

கன்னிரவி (புரட்டாசி மாதம்) சனிக்கிழமை காலை சூரியன் வெளிவந்தபின் கீழ்ப்புறமாக நின்றனர். சில பாடல் கூறினர்.

பாலில் நெய்போலவே முருகன் வாளா இருந்தான். கீழே விழுந்து வணங்கிய முறையில் மலை உச்சியினின்று உருண்டனர். உடல் பூமியில் வந்தது. சற்று நிதானித்து, மேலே தனது நிலையை எண்ணிநிற்கும் தொண்டமானை நோக்கி, கையமைத்தனர். கீழிறங்கிவந்த அவர் - அடிகளின் இடத்தோளில் மட்டும் கற்பாறை மோதியதால் உண்டான அடிகாரணமாக உதிரம் வந்தது. மற்றப்படி எவ்வித ஊறுபாடுமில்லை. அவர் உதிரத்தைத் துடைத்து, திருநீற்றை அப்பினர். பின்பு அணிமையில் உள்ள செங்கோட்டையடைந்தனர். ஓரன்பர் இல்லில் தங்கினர். அவர் ஏன் இப்படி எனக்கேட்டனர். மலையில் தவறி விழுந்தேன், என்றனர். இருபொருள்பட இருந்தது அவ்வுரை. தவறி விழுந் தேன் என்பது புறப்பொருள்-அன்பினுல் அருளைப் பெற முடியாமல் வைராகவுணர்வு காரணமாக முயன்றது தவறு என்பது உள்ளுறை என்பதாகும். அந்த அன்பர் வருந்தினர். சுடுசோறும் மிளகுப் பொடியும், நல்லெண்ணெயுடன் கலந்து உண்ணச் செய்தார் - உடல் வலியால் சன்னிமுதலியன வராமல் தடைசெய்ய இஃதுஉதவு மென்பது அவர் கருத்து. உடலில் ஓர் எரிவு மிளகு காரணமாக. உள்ளத்தில் இன்னும் காட்சி காணப்பெறமுடியவில்லையே என்பது பற்றி ஓர் எரிவு - என்கின்றனர் அடிகள்.

> ''பனிவரையாள் சேய்கொடுமை பற்றிமனம் எரிந்தாற்போல்
> தனி உடலம் காந்தியது''

என்கின்றனர். பின் நெல்லை சென்ருர்கள்.

> ''வடதிசையிற் றலைவைத்து, மறலிதிசைக் கால் நீட்டி
> உடலைஅந்தத் திருமலையின் உச்சியினின் றுருட்டிவிட்டேன்
> விடலையிடும் தேங்காய்போல் வேறுபட்டுச் சிதருமல்
> மடமடெனக் கொண்டங்கோர் மண்தரையில் வீழ்ந்ததுவே''

என்பது கவி.

மற்றொருநாள் மனக்கண்முன் காட்சி தந்தார் முருகப்பெரு மான். ''திருமலையிற் சாகாமற் பிழைத்தாய் 'திருவுருவாளன்' என்ற பெயர் தருகின்றேன்'' என்றனர். மற்றும் மலைமீதேறி உயிர்விட முயன்றனையே இறந்தால் என்புரிவாய்? நானல்லவா தாங்கி னேன்? என்றறைந்தனர். பதிலுக்கு அந் நிலையான (உயிரான) எனக்கு இறப்பேது? இவ்வுடல் மாயுமேயானுல் வேறு ஒன்று இதைவிட மேலாக அமையுமென்று கூறினர். அதைக்கேட்ட முருகப்பெருமான் அப்படியே தம் திருக்கரங்களால் வாரிஎடுத்து மார்போடணைத்தார். முத்தமிட்டார். உடனே தன்னை மறந்து பேரின்ப உணர்ச்சி பெற்றேன் என்பது அடிகள் திருவாக்கு.

"பாவியேன் தன்மனத்தில்
தனித்துவந்து திருமலைமேற் சாகாமற் பிழைத்ததனுற்
செனித்த திரு வுருவாளன் என்றொருபேர் செப்பினுல்"

"இலைவேலான் மற்றொரு நாள் என்மனத்திற் றோன்றிஅந்த
மலைமீதேன் சென்றுருண்டாய் மாய்வுறில்என் செய்தியென்றான்
நிலையாம் எற் கிறப்பேது? நிகழ் உடலின் மேலாம் ஒன்று
அலைநீர்சூழ் பாருலகின் அமையுமென்றேன், அதுகேட்டு,

கைத்தலத்தால் எடுத்தணைத்துக் களிகூர்ந்து கன்னத்துஓர்
முத்தமிட்டான் அப்போது மூர்ச்சைஒக்கும் சுகமெய்திச்
சித்தமதே சாட்சியதாய்த் திருவருளின் பிளிற்றினைத்தேன்.
அத்தகைய விளையாடல் அதனிமித்தம் பலசெய்தான்"

என்று தம்வரலாற்று நூலிற் கூறுகின்றார்.

தோளில் ஏற்பட்ட புண் உலர்தற்காக அன்பினர் பலர் ஏதேதோ கூறினர். சாதாரணமாக வந்த புண்ணுக்கு நீங்கள் கூறியது பொருந்தும். இது திருவருட்பேறு கருதிவந்தபுண். இதற்கு மருந்து திருநீறு ஒன்றேதான் என்று கூறி, தினமும் நீராடிய பின் திருநீற்றையே புண்ணின்மீது இட்டனர். புண் காரணமாகக் குளியாமலோ, வழிபாடு செய்யாமலோ, ஏட்டிற்பாடல் எழுதாமலோ இருந்ததில்லை - பிறர்கண்டு அருவருக்குமாறு இரத்தமோ சீழ்வடிதலோ இல்லை என்று கூறிய அடிகள் புண் ணுக்கு ஓர் எடுத்துக்காட்டு ஒன்றைக்கூறுவது சிந்திக்கவுள்ளது. அது :

"உரைத்தகரு உளக்கிழங்கொத்து ஒளிர்ந்தது-என்பார் மேல்தோல்
நீங்கியகருணைக்கிழங்கென்பது பொருத்தமான உவமை.

ஒருநாள் வள்ளிநாயகி இவரது மனக்கண்முன் தோன்றினர். அடிகள் மதிப்பில்லார் போல நின்றார். தாயுள்ளம் தன்னையறியா மல் இருக்கின்றதைக் கண்டு அடிகள்பால் வினவுகின்ற இனிமை,

"பழகினர்போன்று எனைஅறியாய்கொல்லோ, முன்னம்
பார்த்திலையோ? உருமலையிற் பரிமேலேறும்
அழகியநம்பியின் இளையமனையாள் நீவந்து
அங்குசிலநாள் வசித்தாயன்றோ என்றாள்
அழகர்மெச்சத் தகும்புலமைத்திறம் எங்கேயோ
கவர்ந்துகொண்ட(து) அந்தமட்டும் கழறக்கேட்டும்
மழவடிவக் குகனருளால் உலகமெல்லாம்முன்
வழங்கியதாய் என அறிந்து வணங்கிலேனே"

என்கின்றனர் அடிகள்.

இவ்வளவு விளக்கியும்கூட உணரவில்லையே என்று எண்ணிய தாய் உள்ளம், வலிந்து வந்து புண்ணின்மீது தன்கரத்தால் திருநீற்றைப் பூசி வாயிலிட்டு நெற்றியிலும் அணிந்ததை எண்ணி அடிகள் கூறுவதை அடுத்துள்ள கவி விளக்குவதாகும்.

“தாயிதயத் தூரிமைமக்கள் மீதுண்டாதல்
    தன்னைஅவர் உபசரிக்கும் தன்மைக்கன்று என்று
ஆயிரம்நூல் களும்உலகும் பகரும் உண்மை
    அசத்தியமாய்ப் போகாமல் அவள்தன் நீற்றுக்
கோயிலவிழ்த்து ஒருமூன்று விரலால் அள்ளிக்
    கொண்டுவந்தென் இடத்தோளிற் குளிரப்பூசி
வாயிலிட்டு நெற்றியிலும் தரித்தாள், சற்றும்
    மறுக்காதொப்பியதும் என்றன்மனப் பண்பன்றே”

என்பதால் வள்ளித்தாய் தம்மிடத்திலுள்ள அன்பின் ஆழத்தை இவ்வளவு இனிமையாகக் கூறினர். அடிகள் வள்ளிநாயகியைப் பெற்ற தாயாகவும், தெய்வயானையாரை செவிலித்தாயாகவும் பாராட்டுவர். இந்த இரு நிகழ்ச்சிகளும், தண்டபாணி அடிகளின் முருகவழிபாட்டிலுள்ள பற்று, திடமான நம்பிக்கை, உபாசனையின் உறுதிப்பாடு, இறையருள் தாயாக முன்வந்து உடற்புண்ணை ஆற வழி செய்தது. தந்தையாக நின்று மலையிலிருந்து உருண்ட உடல் சிதையாவாறு மெல்லெனப் பூமியில் வந்து தங்கும்படி காத்ததும் ஆதிய செய்திகளை அறியச் செய்தது.

———

வி-ம்.

மறைமலையடிகள் நூல்நிலைய 20ஆம் ஆண்டு நிறைவு விழா அமைப்புக் குழுக் கூட்டம்

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் அறநிலையமான மறைமலையடிகள் நூல்நிலையத்தின் 20ஆம் ஆண்டு நிறைவு விழாவை வருகிற ஆகஃச்டுத் திங்களில் சிறப்பாக நடத்துவதற்கான அமைப்புக் கூட்டம் 4—7—79 அன்று மறைமலையடிகள் நூல்நிலையத்தில் சென்னை பிரிட்டிசு தூதரக நூலகர் திரு. எம். கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இதில் சென்னைப் பல்கலைக்கழக நூலகர் திரு. பி ஏ. மோகன ராசன், கன்னிமரா நூலக நூலகர் திரு. ஏ. எம். சௌந்திரராசன், ஐ. ஐ. டி. நூலக நூலகர்கள் திரு. தீனதயாளு, திருமதி ஜெய ராணி துரைராஜ், சென்னை மருத்துவக் கல்லூரி முன்னாள் நூலகர் திரு. கிருஷ்ணமூர்த்தி, பச்சையப்பன் கல்லூரி நூலகர் திரு. பா. பெருமாள், உ. வே. சா. நூலகத்தின் திரு. மு. கோ. ராமன், திரு. கோ. மோ. சனார்த்தனம், கழகப் பொதுமேலாளர் திரு. இரா. கல்யாணசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வந்திருந்த அனைவரையும் நூலகர் இரா. முத்துக்குமாரசாமி வரவேற்று விழாவைக் கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை எவ்வாறு நடத்த விரும்புகிறார்கள் என்பதை எடுத்துக் கூறினார். விழாவையொட்டி நூலகப் பணி பற்றிய மலர் உருவாவது பற்றியும் அதில் தமிழகத்தில் உள்ள பல்வேறு நூலகங்களைப் பற்றிய கட்டுரைகளும் நூலகப் பணி குறித்துக் கவிஞர்கள் மலருக்கென இயற்றிய கவிதைகளும் மற்றும் பெருமக்கள், ஆய்வாளர்கள் முதலியோரின் வாழ்த்துரை, பாராட்டுரை கருத்துரைகளும், இடம் பெறுமென்றும் கூறினார்.

மலரில் சேர்ப்பதற்குப் புதிய தலைப்புக்களில் புதிய கட்டுரைகளை எழுதித்தர நூலகர்கள் முன்வந்தனர்.

விழாவையொட்டி ரூ 2,000 தொகுத்து அதனை வைப்பு நிதியாக்கி அதிலிருந்து கிடைக்கும் ஈட்டுத் தொகையைக் கொண்டு ஆண்டுதோறும் மறைமலையடிகள் நூல்நிலையத்திற்கு அருகிலுள்ள நான்கு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குப் புத்தகம் படிக்கும் ஆர்வத்தை வளர்க்கும் போட்டியை நடத்துவதென்றும்,

விழாவில், ஓய்வு பெற்ற நூலகர்களைப் பாராட்டுவதென்றும் முடிவாயிற்று.

விழா சிறக்க அனைவரும் ஒத்துழைக்க முன்வந்தனர்.

செய்திகளும் குறிப்புக்களும்

தந்தை பெரியார் நூற்றாண்டு விழா

சீர்திருத்தம், பகுத்தறிவு ஆகியவற்றுக்காக அரும்பாடுபட்ட பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்களின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்பதற்காக இவ்வாண்டு முழுவதும் தமிழக மாவட்டங்கள்தோறும் தமிழக அரசினரால் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ் விழா முதற் கட்டமாகக் கடந்த செப்டம்பர் 17, 18ஆம் நாள்களில், பெரியார் பிறந்த ஊரான ஈரோட்டில், மைய அரசின் பாதுகாப்பு அமைச்சர் மாண்புமிகு ஜகஜீவன்ராம் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து முறையே மதுரை, திருச்சி, நெல்லை, வேலூர், காஞ்சிபுரம், தருமபுரி, சேலம், நாகர்கோயில் ஆகிய ஊர்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. 8—7—79இல் விருதுநகரில் இவ் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், நெ. து. சுந்தர வடிவேலு ஆகிய பெருமக்களும் விழாவில் கலந்துகொண்டு பெரியாரவர்களைப் பற்றிப் பேருரை ஆற்றினர். தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், மற்றுமுள்ள அமைச்சர்களும் இவ் விழாவில் பங்கு கொண்டனர்.

குடந்தை சிவகுருநாதன் செந்தமிழ் நூல்நிலைய வெள்ளிவிழா

இந் நூலக வெள்ளிவிழா குடந்தையில் நூலகக் கட்டிடத்தில் 1—7—79இல் சீருஞ் சிறப்புமாக நடைபெற்றது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இணைப் பேராசிரியர் டாக்டர் தா. வே. வீராசாமி அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள். சென்னை, மறைமலையடிகள் நூல்நிலைய நூலகர் திரு. இரா. முத்துக்குமாரசாமி எம்.ஏ., பி.லிப்.எசி. அவர்கள், தஞ்சை சரசுவதி மகால் நூலகர் திரு. சீராளன், பேராசிரியர் இரா. இராமசேசன் ஆகியோர் அரிய உரையாற்றினர். இவ் விழாவினையொட்டிக் கவியரங்கம், கருத்தரங்கம் ஆகியனவும் நடைபெற்றன. சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். மற்றும் அறிஞர் பெருமக்கள் பலர் உரையாற்றினர்.

தமிழ்க் கலைக்களஞ்சியம் நிறுத்தப்பட்டது

பல்லாண்டுகளாகத் தமிழ்க் கலையுலகிற்கு அரும்பணியாற்றிய கலைக்களஞ்சியம் சிறுவர் கலைக்களஞ்சியம் ஆகியவற்றைப் பல தொகுதிகளாக வெளியிட்டு வந்த தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தமிழ்க் கலைக்களஞ்சியப் பணி அண்மையில்—யாரும் எதிர்பாரா வகையில்—எவ்வகை முன் அறிவிப்போ—தக்க காரணங்களோ இல்லாத நிலையில் நிறுத்தப்பட்டு விட்ட செய்தியைத் தமிழகம் அறியும். தமிழரசு அது நிறுத்தப்பட்டதன் காரணம் அறிந்து தொடங்கி நடைபெற ஆவன செய்தல் நன்றாகும்.

கல்வித் துறையில் கலைக் களஞ்சியம் வெளியிடுதல் மிகமிக இன்றியமையாத பணி; கலைக்களஞ்சியம் என்பது அறிவுக் கருவூலம். இதனை உருவாக்கும் பணி என்றும் தொடர்ந்து நடைபெற வேண்டிய பணி. எனவேதான் மேனாட்டார் இத்தகைய பணியில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். இந் நிலையம் நம் தமிழகத்தில் இப் பணிக்கு முற்றுப் புள்ளி வைத்தது மிகமிக வருந்தத் தக்கதாகும். இதனால் அறிவுப் பணி தடைப்படுவது மட்டுமின்றி இத் துறையில் ஈடுபட்ட பலரும் வேலை இழந்து தவிக்கின்றனர். அறிஞர்கள் வருந்துகின்றனர். எனவே, அரசு உடனடியாக இதில் தலையிட்டு ஆவன செய்து, தமிழ்க் கலைக்களஞ்சியத்தைப் புத்துயிர் பெறச்செய்யும் வழிவகை காண்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 95ஆம் ஆண்டு நிறைவு விழாவும், சைவசித்தாந்த மகா சமாசத்தின் சிறப்பு மாநாடும்

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் இவ் விழாக்கள் முறையே 1979 ஜூன் 29, 30 ஜூலை 1 ஆகிய நாள்களில் திருமந்திர நகரில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. முதல் நாள் நிகழ்ச்சிகள் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையிலும், 2, 3ஆம் நாள் நிகழ்ச்சிகள் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் தலைமையிலும் நடைபெற்றன. முதல் நாள் நிகழ்ச்சியாகச் சமாசச் சிறப்பு மாநாடு நடைபெற்றது. திருவாளர்கள் சு. கி. சிவம் பி.ஏ., பி.எல்., சுவாமி தமிழ்ப் பித்தன், கு. வைத்தியநாதன் டாக்டர் கு நம்பியாரூரன், திருமதி சாரதா நம்பியாரூரன், ந. சேது ரகுநாதன், தி. வ. கலியாண சுந்தரம் ஆகியோர் உரையாற்றினர். விழாவினையொட்டித் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் பட்டி மன்றம் ஒன்றும் நடைபெற்றது.

தென்காசி திருவள்ளுவர் கழகம்–52 ஆவது திருக்குறள்விழா

இக் கழகத்தின் 52-ஆவது திருக்குறள் விழா முறையே ஜூன் 9, 10, 11, 12 ஆம் நாட்களில் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்தார். குறளரங்கம், கவிஞர் முற்றம், தனியுரை, பட்டிமன்றம், மாணவர் மன்றம் என்னும் பிரிவுகளில் அறிஞர்களும், கவிஞர்களும், மாணவர்களும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர். தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடைபெற்ற பட்டிமன்றத்தில், மார்க்சியமா? கௌடில்யமா? வள்ளுவமா? என்னும் தலைப்புக்களில் முப்பெரும் அறிஞர் குழுவினர் வாதிட்டமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கப் பயண வழியனுப்பு விழா

திருக்கோவையார், திருமந்திரம், திரு அருட்பா கருத்துக்களை ஒப்பு நோக்கித் தெளிவுசெய்து நூல் வெளியிட அமெரிக்க சிராகஸ் பல்கலைக் கழகத்தின் அழைப்பை ஏற்று வெளிநாடு செல்லும்

சைதைத் தமிழ்ச் சங்கத் தலைவரும், ஆசிரியரும் ஆகிய புலவர் சொ. ர. தேமொழியார் அவர்களுக்குப் பல அமைப்புக்களும், சங்கங்களும் அறிஞர்களும் வாழ்த்துரை வழங்கி வழியனுப்பிவைத்தனர். இந்த விழா 10-6-79 அன்று சைதை காரணீசுவரர் திருக்கோயிலில் சிறப்பாக நடைபெற்றது. திரு. த பாலசுந்தரம் தலைமை தாங்கினர். பெருமக்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழ்நாட்டுத் தமிழர் பேரவையின் 2-வது மாநில மாநாடு

தமிழ்நாட்டுத் தமிழர் பேரவையின் 2-வது மாநில மாநாடு 22—7—79 இல் திருச்சிராப்பள்ளி தேவர் மன்றத்தில், தொழிலதிபர் நா. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற இருக்கிறது. இம்மாநாட்டில் தமிழகத்தின் தலை சிறந்த தமிழ் அறிஞர்களும், தொழிலறிஞர்களும், ஒய்வு பெற்ற மாவட்ட ஆட்சியாளர்களும், ஒய்வு பெற்ற துணை வேந்தர்களும் வேளாண்மை வல்லுநர்களும் சிறப்புரை ஆற்றுவர். 40 வயதுக்கு மேற்பட்டவர்களும் எந்த அரசியல் கட்சியிலும் சேராதவர்களுமே பேராளர்களாகப் பங்குபெற முடியும் எனவும், 5 ரூபா கட்டணம் செலுத்த வேண்டுமெனவும், பார்வையாளர்களாக அனைவரும் ரூ. ஒன்று கட்டணம் செலுத்தி 11-7-79க்கு முன் நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் ஓர் அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(முன் இதழ் ருoச ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் கழக ஆட்சியாளர்—சூன் 79	ரூ.	10	00
திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் மேலாளர், சூன் 79	ரூ.	5	00
,, அ. தி. அ. ஈஸ்வர், சென்னை-1, சூன் 79	ரூ.	5	00
,, மறை திருநாவுக்கரசு, சென்னை	ரூ.	100	00
,, திருமதி மா. நவநீத கிருட்டிணன், எம்.ஏ., மதுரை	ரூ.	100	00
Dr. த. வே. வீராசாமி அவர்கள், சென்னை-20	ரூ.	25	00
திரு. கே. அரங்கநாதன் அவர்கள், வடபுதுப்பட்டு	ரூ.	5	00
Dr. சிற்சபை காஞ்சிபுரம்	ரூ.	10	00
ஜோதிஸ்டோர்ஸ் காஞ்சிபுரம்	ரூ	10	00

அருள்மிகு தண்டபாணி அடிகளின் 81ஆவது குருபூசை விழா

வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி அடிகளின் 81-ஆவது குருபூசை விழா முறையே 10, 11—7—79 ஆம் நாள்களில் திருவாமாத்தூர் கௌமார மடாலயத்தில் நடைபெற்றது. 10—7—79

இல் தவத்திரு சுந்தர சுவாமிகள் இலட்சார்ச்சனை வழிபாட்டைத் துவக்கி வைத்தார்கள். 11—7—79இல் குருபூசை விழா நடைபெற்றது. புலவர் தி. மு. சங்கரலிங்கம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி யடிகள் தொடக்கவுரை நிகழ்த்தினர்.

மதிப்புரை

காந்த கீதங்கள்

[ஆசிரியர்: த. சுவாமிதாசு; வெளியீடு: தமிழரசி பதிப்பகம், 85, சல்லிவன்சு தோட்டத்தெரு, மயிலாப்பூர், சென்னை-4. விலை: உருவா 8-00.]

தமிழ் நாட்டின் பேராறுகளுள் ஒன்றான பாலாற்றின் கரையில் அமைந்துள்ள இராணிப் பேட்டையைக் களமாகக் கொண்டு பதின் மூன்றும் நூற்றாண்டின் வரலாறு தழுவிய கற்பனைப் புதினமாகப் புனையப்பட்டுள்ளது இந் நூல். அயன் மொழிச் சொற்கள் இடம் பெற்றிருப்பினும் நூலின் நடை விறுவிறுப்பாகவும், புதுமையாகவும் அமைந்துள்ளது. கதையமைப்பிற்கும் நிகழ்ச்சிகளின் கட்டுக் கோப்பிற்கும் ஆசிரியர் கையாண்டிருக்கும் உத்தி பாராட்டற்பாலது.

கூட்டுக்கு வெளியே

[ஆசிரியர்: மு. வை. அரவிந்தன்; வெளியீடு: முத்துப் பதிப்பகம், 58, புதுவைச்சாலை, வளவனூர், தெ. ஆ. (மா. வ.); விலை: உருவா 2-25.]

வாழ்வியல் உண்மைகளை உருவகக் கதைகளின் வழி விளக்கியுள்ளார் இந் நூலாசிரியர். எளிய இனிய ஆற்றொழுக்கான நடையையுடைய இருபத்தேழு உருவகக் கதைகள் இந் நூலில் இடம்பெற்றுள்ளன. ஆசிரியரின் கற்பனைத் திறம் பாராட்டற்பாலது.

பெரியபுராண ஆய்வுரை—நான்காம் தொகுதி அறுபதடியார்

[ஆசிரியர்: மறை. திருநாவுக்கரசு மறைமலையடிகள் பதிப்பகம், சென்னை-82. விலை: உருபா 10-00.]

இத் தொகுதியின்கண் அறுபது அடியவர் வரலாறுகள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையில் மொழிவளம்—கருத்துவளம் நிரம்பியனவாய் அமைந்துள்ளன. அத்துடன் ஆங்காங்கே தக்க ஆய்வுரைகளும் தரப்பட்டுள்ளன. நாயன்மார் வரலாறுகள் அகச்சான்று புறச்சான்றுகளுடனும் ஐயங்களை நீக்கும் வகையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது இவ் வாய்வுரைகளைப் படிப்போர் பெரியபுராண ஆராய்ச்சியாளராய் விளங்குதல் திண்ணம்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 80, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

கழகப் புதிய வெளியீடுகள்

மேனிலைப் பள்ளிகட்கேற்ற கருவி நூல்கள்

பொருளியல் (Economics)

ஆசிரியர் :

மா. பா. குருசாமி, எம்.ஏ., எம்.லிட்., டி.ஜி.டி.,

பொருளியல்துறைத் தலைவர்,

ஆதித்தனர் கல்லூரி, திருச்செந்தூர்.

அணிந்துரை :

டாக்டர் வேதகிரி சண்முகசுந்தரம்,

எம்.ஏ., எம்.லிட், பி. எச்டி, டி பில், (ஆக்சன்)

பொருளியல் துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

ஆங்கிலேயர் ஆட்சிக்கு முந்திய இந்தியப் பொருளாதாரம்

(Indian Economy before British Rule)

ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வருமுன் இருந்த இந்தியப் பொருளாதார நிலையும், அவர்தம் வருகைக்குப் பின்னர் நாளடைவில் அப் பொருளாதார அமைதி எப்படியெல்லாம் சீரழிந்தது என்பது பற்றியும் விளக்குகிறது இச் சிறு நூல்.

ரூ. 5-00

பொருளாதார அமைப்புக்கள் (Economic Systems)

முதலாளித்துவம், சமதர்மம், கூட்டுப் பொருளாதாரம் ஆகிய மூவகைப் பொருளாதார அமைப்புக்கள் பற்றியும், பொதுவாக, பொருளாதாரம் என்றால் என்ன என்பதற்கு விளக்கமும். மூவகைப் பொருளாதாரங்கள் பற்றிய ஒப்பீடும் இந் நூலில் கூறப்படுகின்றன. நூலின் இறுதியில் மாதிரிக் கேள்வித்தாள், பொருளியல் பொன்மொழிகள் ஆகியனவும் சேர்க்கப்பெற்றுள்ளன.

ரூ. 4-00

வருவாயும் வேலைவாய்ப்பும்

(National Income and Theory of Employment)

நாட்டின் வருவாய், அதனைக் கணக்கிடும் முறைகள் இந்தியாவில் நாட்டு வருவாய்க் கணிப்பு, வேலை வாய்ப்பும் வேலை இன்மையால் விளையும் சிக்கல்களும், வருவாய் ஏற்றத் தாழ்வுகள், நம் நாட்டில் எங்ஙனம் வருவாய் பகிர்வு செய்யப் படுகிறது என்பன இந் நூலின்கண் விளக்கப்படுகின்றன. மாதிரிக் கேள்வித்தாள், பொருளியல் பொன்மொழிகள் ஆகியனவும் சேர்க்கப்பட்டுள்ளன.

ரூ. 4-00

அப்பர் அச்சகம், சென்னை-1.